விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: எட்டு

சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2037 வைகாசி 01 திங்கட்கிழமை (15.05.2006) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 147



ராம்கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

RAMCO

ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.

ராம்கோ சீமெந்து


## தீவுப் பகுதியில் பயங்கரம்

# இரு குழந்தைகள் உட்பட 13 பேர் சுட்டுக்கொலை

## 20 கடைகள் தீக்கிரை

(யாழ்ப்பாணம்)

தீவகத்தில் ;அல்லைப்பிட்டி,புளியங்கூடல் மற்றும் வேலணைப் பகுதிகளில் நேற்று முன்தினமிரவு 13 அப்பாவிப் பொதுமக்கள் கடற்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

அல்லைப்பிட்டியில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாய்,தந்தை மற்றும் இரண்டு குழந்தைகள் உட்பட 9 பேரும் ;புளியங்கூடலில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவரும் ;வேலணையில் ஒருவருமாக 13 பேர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

இருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அத்துடன் வேலணை வங்களாவடியில் உள்ள பெற்றோல் நிரப்பு நிலையம் உட்பட 5 கடைகளும் புளியங்கூடலில் 15 கடைகளும் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன.இவற்றில் இருந்த பெறுமதி வாய்ந்த பொருட்கள் எரிந்து நாசமாகின. இதேவேளை சம்பவம் இடம் பெற்ற தீவுப்பகுதி கடற்படையினரின் பூரண கட்டுப்பாட்டிற்குள் இருப்பதென்பது குறிப்பிடத்தக்கது. (08 ஆம் பக்கம் பார்க்க)

## படுகொலைகளைத் தடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கவில்லை

### கூட்டமைப்பு குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இராணுவத்தினரால் பொதுமக்கள் படுகொலை செய்வதைக் கண்டித்து தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு அவசர கடிதமொன்றினை அனுப்பிவைத்துள்ளார்.

அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, மீண்டும் மிகுந்த வேதனையுடன் தங்களுக்கு இச் செய்தியை யாழ்ப்பாணத்தில் இருந்து அனுப்புகின்றேன்.

ஏற்கனவே தங்களுக்கு, அப்பாவிப் பொதுமக்கள் கொலைசெய்யப்படும் சம்பவங்கள் குறித்து பல கடிதங்கள் மூலமும் பாராளுமன்றத்தின் மூலமும் தெரியப்படுத்தியுள்ளோம்.

எனினும் இக் கொலையுடன் சம்பந்தப்பட்டவர்களுக்கு (08 ஆம் பக்கம் பார்க்க)

## அச்சுவேலியிலும் ஆவரங்காலிலும் இரு இளைஞர்கள் சுட்டுக்கொலை

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி பத்தமேனிப் பகுதியில் நேற்றுக்காலை 8.40 மணியளவில் இளைஞர் ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

உயிரிழந்தவர் பாரதி வீதி அச்சுவேலியைச்சேர்ந்த பசுவலிங்கம் காண்டீபன் (வயது 25) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இவர் வீதியில் நடந்துகொண்டிருந்த போது இனந்தெரியாதோரால் சுடப்பட்டுள்ளதாக அச்சுவேலிப்பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை பருத்தித்துறை வீதி ஆவரங்கால் பகுதியில் நேற்று நண்பகல் மற்றொரு இளைஞன் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். ஆவரங்காலைச் சேர்ந்த ஆறுமுகம் தவேந்திரன் (வயது 31) என்பவரே சுடப்பட்டவராவார்.

இவர்கள் இருவரது சடலங்களும் யாழ். போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டு விசாரணைகளின் பின் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ச-15,05)

## யாழில் இடம் பெறும் கொலைகளுக்கு உடனடியாக முற்றுப்புள்ளி வையுங்கள்

### இளம்பரிதி க.கா.குழுவிற்கு அவசர கடிதம்

(பளை)

இராணுவத்தினராலும் துணை இராணுவக்குழுவினராலும் நிகழ்த்தப்பட்டுவரும் யாழ்.படுகொலைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டுமென்று இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவிற்கு விடுதலைப்புலிகளின் யாழ்.அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி கடிதம் அனுப்பியுள்ளார்.

அக்கடிதத்தில் கூறப்பட்டுள்ளதாவது,

யாழ்.குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் அப்பாவித் தமிழ் மக்கள் மீது திட்டமிட்ட வகையில் பாதுகாப்புப்படையினர் மேற்கொண்டுவரும் படுகொலைகளின் நீட்சியாக தீவகத்தில் கடற்படையினராலும் அவர்களோடு சேர்ந்தியங்கும் துணை இராணுவக் குழுவாலும் மேற்கொள்ளப்பட்ட மிலேச்சத்தனமான இனவெறிப்படுகொலைகளை தங்கள் கவனத்தில் கொண்டுவருகிறோம்.

கடற்படையினர் அல்லைப்பட்டி பிலிப் நேரியர் தேவாலயத்திற்கு அண்மையில் செல்லத்துரை என்பவரது வீட்டிற்குச் சென்று அங்கிருந்த அப்பாவி மக்களை சுட்டும் கைக்குண்டு வீசியும் படுகொலை செய்துள்ளனர்.

கடற்டையினருக்கு எதிராக எந்த வித சம்பவமும் நடைபெறாத (08 ஆம் பக்கம் பார்க்க)

## 60 கண்காணிப்பாளர்களால் யுத்தத்தை நிறுத்த முடியாது

### கண்காணிப்புக்குழுத் தலைவர் தகவல்

(கொழும்பு)

யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர் 60 பேரால் மட்டும் இலங்கையில் நிலவும் யுத்தத்தை முடிவுக்குக்கொண்டு வரமுடியாது என இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் மேஜர் ஜெனரல் உல்ப் ஹென்றிக்சன் தெரிவித்துள்ளார்.

பிரச்சினைக்கு தீர்வுகாண்பதற்கு சம்பந்தப்பட்டவர்களாலேயே முடியும் என அவர் தெரிவித்தார்.

எவ்வாறாயினும் இலங்கையில் உக்கிரமற்ற சண்டை இடம்பெறுவதாக அவர் கூறினார். ரொய்ட்டர் செய்தி ஸ்தாபனத்திற்கு வழங்கிய செவ்வியிலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.

யுத்தம் தொடர்பாக பல கருத்துக்களை தெரிவிக்கலாம். எங்களிடம் சமாதான உடன்படிக்கை இல்லை. யுத்த நிறுத்த உடன்படிக்கையே உள்ளது. அதனால் யுத்தம் இடம் பெறுகின்றது; தீவிரமற்ற யுத்தமென இதனைக்கூறலாம்.தொடர்ந்தும் நான் இங்கேயே இருக்க வேண்டுமென நினைக்கிறேன்.

எவ்வாறாயினும் 60 பெயரால் மாத்திரம் இவ் யுத்தத்தை நிறுத்த முடியாது.

இரு தரப்பினரையும் சந்திக்க வைப்பதற்கான திருப்திகரமான ஒரு நிலையை உருவாக்க இரு தரப்பினருக்கிடையிலான முக்கியம் வாய்ந்த அமைப்பாக நாங்கள் இருக்கின்றோம்.

எங்களின் சேவை தொடர்ந்தும் இலங்கைக்கு தேவைப்படுவதாக நாம் கருதுகின்றோம் என்றார். (ச-05)

# வன்முறைகள் தொடர்ந்தால் அபி. பணிகள் பாதிக்கப்படும்

## ஆசிய அபிவிருத்தி வங்கி சுட்டிக்காட்டு

(திருகோணமலை)

வடக்கு-கிழக்கு வன்முறைகள் தொடர்ந்தால் அபிவிருத்திப் பணிகள் பாதிப்படையும் என்று ஆசிய அபிவிருத்தி வங்கி தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக வங்கியின் வதிவிடப் பிரதிநிதி அலைக்சாண்ரோ பையோ கருத்துத் தெரிவிக்கையில்,

வன்முறைகளால்பாதிப்படைந்த பகுதிகளில் புதிய அபிவிருத்தித் திட்டங்களைமேற்கொள் வதற்கான நிதி ஒதுக்கீட்டுக்கு முன்னதாக, பாதுகாப்பு நிலைமைகளை அவதானித்து வருகின்றோம்.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் நிலவும் அசாதாரண நிலைமைகளால் எமது திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன. எமது அலுவலகப் பணி நேரங்கள் குறைக்கப்பட்டுள்ளன.

அரசாங்கமும், தமிழீழ விடுதலைப்புலிகளும் பேச்சுமேசைக்கு விரைவில் திரும்ப வேண்டும். அனைவரினதும் கவனமும் இரு தரப்பினர் மீதே உள்ளன.

இந்த நாட்டுக்கு உதவி வழங்குவதற்கு முன்னதாக, அமைதியான சூழ்நிலையையே உதவி வழங்கும் அமைப்புக்கள் எதிர்பார்க்கின்றன என்று அவர் மேலும் கூறினார். (க)

# இரண்டு கால் விலங்குகளிடமிருந்து மக்களை பாதுகாக்கவே ஆயுதப்பயிற்சி வழங்குகிறோம்

## என்கிறார் பொலிஸ்மா அதிபர்

எல்லையோர சிங்கள கிராம மக்களை முன்னர் நான்கு கால் விலங்குகளிடமிருந்து பாதுகாத்தோம். இப்போது இரண்டு கால் விலங்குகளிடமிருந்தும் காப்பாற்ற வேண்டியுள்ளது என்று பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ கூறியுள்ளார்.

எல்லையோர சிங்கள கிராமங்கள் மற்றும் குடியேற்ற சிங்களப் பகுதி மக்களுக்கான பொலிஸாரது ஆயுதப் பயிற்சி குறித்து கொழும்பு ஏடு ஒன்று வெளியிட்டுள்ள செய்தியில்,

அலி ஒலுவ எனும் சிங்கள கிராம மக்களுக்கு பொலிஸார் துப்பாக்கி சுடும் பயிற்சி அளித்து வருகின்றனர். 'எனது குடும்பத்தைப் பாதுகாக்கவே ஆயுதம் எடுத்துள்ளேன்' என்கிறார் பயிற்சி எடுக்கும் குமார என்பவர்.

தமிழர் வசிக்கும் கிராமம் ஒன்றிலிருந்து சிறிது தொலைவில் உள்ள அடர்ந்த வனப்பகுதியில் தனது மனைவி மற்றும் இரு குழந்தைகளுடன் அவர் வசித்து வருகிறார். ஒரு காலத்தில் யானைகளின் அச்சுறுத்தலால் அலி ஒலுவ என்ற பெயர் வைக்கப்பட்டிருந்தது. இப்போது வேறு ஒரு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. இத்தகைய ஆயுதங்கள் இப்போது மட்டும் வழங்கப்படவில்லை.

1983ஆம் ஆண்டு இனக்கலவரத்தைத் தொடர்ந்து 1985ஆம் ஆண்டுநாடாளுமன்றத்தில் சிறப்பு சட்டம் ஒன்று கொண்டுவரப்பட்டது. அதனடிப்படையில் ஊர்காவல்படை உருவாக்கப்பட்டது. அதன் பின்னரான ஆண்டுகளில் சிங்கள எல்லையோர கிராமங்களுக்கு ஆயுதங்கள் விநியோகிக்கப்படவில்லை. தற்போது நிலைமைகள் மாறியுள்ளன.

இரு வாரங்களுக்கு முன்னதாக கிழக்குப் பிரதேச அனைத்து பொலிஸார் மூலமாக ஆயுதங்கள் விநியோகிக்கப்பட்டன. சேரு நுவரப் பகுதியில் 210துப்பாக்கிகள் வழங்கப்பட்டுள்ளன. கொழும்பிலிருந்து மேலதிகமாக 800துப்பாக்கிகள் கிழக்குப் பிரதேசத்துக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது. கிராம தொடர் வலைப் பின்னல் அமைப்பு ஒன்றையும் படைகள் உருவாக்குகின்றன. பொதுமக்கள் தங்களது விவசாய செயற்பாடுகளின் போதும் இதர நேரங்களின் போதும் பாதுகாத்துக்கொள்வதற்காக ஆயுதங்கள் வழங்கப்படுவதாக பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இருப்பினும் அண்மைக்காலமாக ஆயுதங்கள் வழங்கப்பட்டமை தொடர்பில் அவர் கருத்துத் தெரிவிக்க மறுத்துவிட்டார். எல்லையோரக் கிராமங்களில் பொலிஸாரது நிலைகள் அதிகப்படுத்தப்பட்டுள்ளன. ஊர்காவல் படையினரது எண்ணிக்கையும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

'நான்கு கால் விலங்குகளிலிருந்து முன்னர் கிராம மக்களை பாதுகாக்க வேண்டியிருந்தது. இப்போது இரண்டு கால் விலங்குகளிடமிருந்து அவர்களைப் பாதுகாக்க வேண்டியுள்ளது' என்றும் சந்திரா பெர்னாண்டோ தெரிவித்தார்.

எல்லையோர தமிழ் கிராமங்களுக்கு ஏன் ஆயுதங்கள் வழங்கப்படவில்லை என்ற கேள்விக்கு சில பகுதிகளுக்கு மேலதிக படையினர் அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர் என்றார்.

இருப்பினும் தமிழ்க் கிராம மக்களுடன் விடுதலைப்புலிகள் இணைந்திருப்பதால் அவர்களுக்கு ஆயுதங்கள் வழங்குவது ஆபத்தானது என்றும் பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ தெரிவித்தார்.

'அந்த ஆயுதங்கள் விடுதலைப் புலிகளுக்கே சென்று விடும்' என்றும் சந்திரா பெர்னாண்டோ கூறினார். தமிழ் மக்களைப் பாதுகாப்பதாகக் கூறிக்கொண்டு சிங்கள கிராமங்களை விடுதலைப் புலிகள் தாக்குகின்றனர் என்றும் அவர் மேலும்தெரிவித்தார். (க-9)

# தனியார் பஸ் சேவைக்கு கம்பனிமுறை அறிமுகம்

(கொழும்பு)

தனியார்பஸ்சேவைக்கு கம்பனி முறைஅறிமுகம் செய்யப்படு மென தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது. இது தொடர்பான அறிக்கை அமைச்சர் எ. எச்.எம்.பௌசியிடம் எதிர்வரும் 30 ஆம் திகதி கையளிக்கப்படவுள்ளது.

இந்த ஆணைக்குழுவின் தலைவர் எல்.எ.விமலரத்தின தெரிவித்த தகவலில், இந்த முறையின் கீழ் 50 தனியார் பஸ்கள் ஒரு கம்பனியின் கீழ் கொண்டு வரப்படவுள்ளன. இந்தத் திட்டம் அறிமுகம் செய்யப்படுவதன் நோக்கம் தனியார் பஸ் ஊழியர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதோடு பிரயாணிகளுக்கு சிறந்த சேவை அளிப்பதாகும்.

சில தனியார் பஸ் ஊழியர்கள் ஊழியர் சேமலாப நிதிக் கொடுப்பனவுக்கும் அருகதையற்றவர்களாக இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. புதிய முறையினால் நாடு முழுவதிலும் சேவையில் ஈடுபட்டுள்ள பஸ்களில் கடமையாற்றும் 5 ஆயிரத்திற்கும் அதிகமான பஸ் ஊழியர்களின் உரிமைகள் பாதுகாக்கப்படும். (க-9)

# இராசி பலன்

**15.05.2006**
**(வைகாசி 1, திங்கட் கிழமை)**
**துதியை பிற்பகல் 12.06 மணிவரை**
**கேட்டை முன்னிரவு 10.08 மணிவரை**
**இராகுகாலம் 7.23-8.53மணிவரை**
**சுபநேரம் 11.53-1.23 மணிவரை**
**தூய ஆவியானவர் பெருவிழா**

| | |
|---|---|
| மேடம் | எதிர்பாராத அச்சம், உடல்நலக்குறைவு, காரிய தாமதம், போசனசுகம். |
| இடபம் | திடீர பயணம், பொருள் சேர்க்கை, கௌரவமான நிலை, காரியசித்தி. |
| மிதுனம் | சுகவாழ்வு, பகைவர் விலகுவர், காரிய சித்தி, தொழில் விருத்தி. |
| கடகம் | வியாபாரநன்மை, காரிய இடையூறு, மனககவலை, பணக்குறைவு. |
| சிங்கம் | ரோகபயம், தன்னம்பிக்கைக்குறைவு, அற்பர் உறவு, சுபசெலவு. |
| கன்னி | இனிய அனுபவம், வாக்குமேன்மை, புதிய பொருள் சேர்க்கை, காரிய சித்தி. |
| துலாம் | மதிப்புக்குறைவு, பொருள் விரயம், விவாதம், முயற்சி தாமதம். |
| விருச்சிகம் | நண்பர்கள் உதவி, ஆழ்ந்தசிந்தை, சயனசுகம், போசன நன்மை. |
| தனுசு | பிதாசிந்தை, உணர்ச்சி வசப்படல், சுபசெலவு, பிரயாணம். |
| மகரம் | தொழில்சிந்தை, நண்பர்கள் சந்திப்பு, கீர்த்தி, காரிய சித்தி. |
| கும்பம் | சுபநிகழ்வு, கடின உழைப்பு, பிறருக்கு உதவுதல், அதிகாரம். |
| மீனம் | ஆன்றோர் ஆசி, உடல்உழைப்பு, வீண் பயம், ஆரோக்கியக்குறைவு. |

- வளவன்

# கண்காணிப்பு பணிகள் தொடரும்

## கண்காணிப்புக்குழு தெரிவிப்பு

(கொழும்பு)

வடபகுதியில் கடற்படைப் படகுகள் மீது இந்த வாரம் தற்கொலை தாக்குதல்கள் நடத்தப்பட்ட போதிலும் கடற் கண்காணிப்பு தவிர்ந்த ஏனைய கண்காணிப்பு நடவடிக்கைகள் வழமை போல் தொடரும் என இலங்கை போர் நிறுத்தக்கண்காணிப்புக்குழு தெரிவித்துள்ளது.

அதேவேளை கடற்படையினரின் எந்தவித செயற்பாடுகளிலும் தலையிட வேண்டாம் எனக் கோரி விடுதலைப் புலிகள் கடிதம் அனுப்பி இருந்தமையை போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பதில் பேச்சாளர் உறுதிப்படுத்தினார்.

தற்போதைய நிலவரங்களை ஆராய்ந்து அதன் பின்னர் தமது எதிர்கால நடவடிக்கைகள் குறித்து தீர்மானிக்கப்படுமென்றும் அவர் தெரிவித்துள்ளார். (க-9)

# முதியோர் இல்லங்களை மேம்படுத்த நிதிஒதுக்கீடு

(கொழும்பு)

முதியோர் இல்லங்களின் மேம்பாட்டிற்கென சமூக சேவைகள், சமூக சேமநல அமைச்சு 19மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளது. இந்த இல்லங்களின் கட்டடங்களை நிர்மாணிப்பதற்கும், தேவையான உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கும் இந்த நிதி பயன்படுத்தப்படும்.

தேசிய வயோதிபர் விடுதிகளுக்கான செயலகம் இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துகின்றது. இந்த ஆண்டு முற்பகுதியில் இந்தத் திட்டத்திற்கு 9 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் மஹிந்த சிந்தனை கோட்பாட்டிற்கு அமைய அதற்கு மேலும் 10 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-9)

# பயிற்சித்திட்டம்

(கொழும்பு)

இலங்கை தொழிலாளர்கள் வெளிநாடுகளில் வேலைவாய்ப்பு பெற்றுக்கொள்ளப்படுவதை இலக்காகக் கொண்டு குறுகிய கால பயிற்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுமென்று தேசிய தொழில் பயிற்சி மற்றும் தொழில்நுட்ப பயிற்சி அதிகாரசபை அறிவித்துள்ளது.

அதன் தலைவர் இதுகுறித்து கருத்துத் தெரிவிக்கையில்,

பயிற்சி பெற்ற தாதிமார்களுக்கு உலக நாடுகளில் பெருமளவு தேவையிருப்பதாக குறிப்பிட்டுள்ளார். (க-7)

# தற்காப்புப் பயிற்சி



(கிளிநொச்சி)

மட்டக்களப்பு மாவட்டத்தின் கொக்கட்டிச்சோலை கொத்தியாபுலை கரடியனாறு, சுரவணையடியூற்று ஆகிய கிராமங்களில் நேற்று முன்தினம் தற்காப்புப் பயிற்சிகள் ஆரம்பமாகியது. கொக்கட்டிச்சோலையில் நேற்று முன்தினம் பிற்பகல் 3.00 மணிக்கு தற்காப்புப் பயிற்சிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

கொக்கட்டிச்சோலை வர்த்தக சங்கம், மீனவர் சங்கம், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொது மக்கள் என நூற்றுக்கணக்கானோர் கலந்துகொண்டனர்.

கொக்கட்டிச்சோலை விளையாட்டு மைதானத்தில் ஊரக மேம்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த தற்காப்புப் பயிற்சியின் ஆரம்ப நிகழ்வாக பொதுச் சுடரினை மாவட்ட முதலீட்டு பொறுப்பாளர் றொசான் ஏற்றி வைத்தார். தமிழீழ தேசியக்கொடியினை இராணுவ புலனாய்வு பொறுப்பாளர் தளபதி பிரபா ஏற்றிவைத்தார். தொடர்ந்து அகவணக்கம் இடம்பெற்றதையடுத்து தற்காப்புப் பயிற்சிகள் ஆரம்பமாகின.

இந்த நிகழ்வில் மாவட்ட ஊரக மேம்பாட்டுப் பேரவை இணைப்பாளர் க.அரிகரன், மாவட்ட இசைக் குழுப் பொறுப்பாளர் அனர்ந்தவர்மன், மாவீரர் குடும்ப நலக் காப்பகப் பொறுப்பாளர் ஐங்கரன், இளையோர் மேம்பாட்டுப் பேரவை பொறுப்பாளர் பொன்மதன் ஆகியோர் கலந்துகொண்டனர். (க)

# மாணவர் பேரவை அலுவலகம் எரிப்பு

## தமிழ் மாணவர் ஒன்றியம் கண்டனம்

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை அலுவலகம் தீயிட்டு எரிக்கப்பட்டமைக்கு யாழ்.மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியம் கண்டனம் தெரிவித்துள்ளது. யுத்தத்தின் மீது பிரியமாகவுள்ளபடைகள் தமிழ் மாணவர்களின் கல்வியை சீரழித்து அவர்களை அச்சுறுத்தும் வகையிலேயே மாணவர் பேரவை அலுவலகத்தை தீயிட்டுள்ளனர். இக் கைக்கூலிகளின் இந்த காட்டுமிராண்டித்தனத்தை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இன்று சந்திக்கு சந்தி நின்று மாணவர்களை சித்திரவதைப்படுத்தும் படைகள் கல்வி நிறுவனங்களை தாக்க தொடங்கியுள்ளமை, தமிழ் மக்களின் குரல்வளையை நசுக்கும் செயலாகும். மேலும் மேலும் தமிழ் மாணவர்களின் கல்வியை சீரழிக்கும் நடவடிக்கைகளை படைகள் உடன் நிறுத்த வேண்டும்.

ஜனாதிபதி தொடர்ந்தும் தனது ஆட்சியை தக்கவைப்பதற்காக இன்றும் கொலைகளுக்கு அனுமதி வழங்கியுள்ளார். போர்நிறுத்தகண் காணிப்புக் குழுவும் பக்க சார்பாக நடக்கின்றது என அக்கண்டன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)


# தமிழர் இருப்பிற்கு வலுச்சேர்த்த தமிழர் ஊடகத்துறை நிகழ்வு

கனேடிய தமிழர்களால் கடைப்பிடிக்கப்பட்டுவரும் சமாதானம் வேண்டிய தமிழர் ஒற்றுமை வாரத்தின் ஆறாம்நாள் நிகழ்வுகள் கனடிய தமிழர் ஊடகத்துறை இணையத்தால் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்டன.

நூற்றுக்கணக்கானோர் கலந்துகொண்ட இந்நிகழ்வு தமிழர் அதிகம் வதியும் பகுதியான ஸ்காபுரோவின் நகரசபை வெளியரங்க மண்டபத்தில் நடைபெற்றது.



கனடாவில் உள்ள தமிழர் பத்திரிகை, வானொலி மற்றும் தொலைக்காட்சி ஆகியவை இணைந்து உருவாக்கியுள்ள கனடிய




தமிழர் ஊடகத்துறை இணையம், இன்றைய நிகழ்வையொட்டி ஒரு கண்காட்சியையும் ஏற்பாடு செய்திருந்தது.

அதில் தாயகத்தில் தமிழ் ஊடகத்துறை மீது இலங்கை அரசும், அதன் படைகளும், இணைந்த துணைக்குழுக்களும் மேற்கொண்டு வரும் தாக்குதல்கள், படுகொலைகள், நெருக்குவாரங்கள் குறித்த படங்கள், செய்திகள் பகிரப்பட்டிருந்தன.

தொடர்ந்த நிகழ்வில் மூத்த தமிழ் ஊடகத்துறையைச் சார்ந்தவர்கள் உட்பட பலரும் தமிழர்களைப் பொறுத்தவரை இன்றைய காலகட்டத்தின் முக்கியத்துவம் குறித்தும் தொடர்ந்து முன்னெடுக்க வேண்டிய பரப்புரைகள் குறித்தும் யுக்திகள், அதன் அவசியம் குறித்தும் பேசினர்.

அத்துடன் உண்மையை பேசுபவர்கள் நெருக்குவாரங்களுக்கு அஞ்சவேண்டியது அவசியமில்லை என்பதையும் உண்மைகளை துணிவுடன் தொடர்ந்தும் எடுத்துச் செல்வோம் என்பதையும் அனைவரும் வலியுறுத்தினர்.

அத்துடன் இது தமிழர்களின் ஒற்றுமையை வெளிப்படுத்தும் செயற்பாட்டின் ஆரம்பமே என்றும் எதிர்வரும் வாரங்களில் தொடர்ந்தும் பல்வேறு செயற்பாடுகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படும்



எனவும் அவர்களால் தெரிவிக்கப்பட்டது. (க-9)

சுன்னாகம்

## கதிரமலைச் சிவன் மஹோற்சவம்

2ஆம் நாள்

இன்று கற்பகத்தருக் காட்சி

### காத்தருளும் அம்பிகை இணைந்தவர்

அதிரவொலி தருமுருகு கங்கைசடை யேற்றி
அழகுநிறை வளருபிறைத் திங்கள்திசை சூட்டி
உதிருமொரு புன்முறுவி லுலகைவழி காட்டி
உதவுமொரு கரமெனவே யபயகரம் நீட்டி
சதிரிடுச தங்கையணி பதகழலே தூக்கி
சகியொடு சமானமென வாழ்வுநிலை நாட்டி
கதிரமலை வருமன்பர் துன்ப பயம் நீக்கி
காத்தருளும் அம்பிகை இணைந்த பெருமானே!

-இயல்வாணன்

# ரெலோ உறுப்பினர்கள் மீது படையினர் தாக்குதல்!

(வவுனியா)

வவுனியாவில் ரெலோ கட்சி உறுப்பினர்கள் மீது இராணுவத்தினர் தாக்குதல் நடத்தியுள்ளனர். வவுனியா முதலியார்குளம் பகுதியிலுள்ள ரெலோ அலுவலகத்தை சுற்றிவளைத்த இராணுவத்தினர் அவ் அலுவலகத்தில் இருந்தோரை கடுமையாகத் தாக்கியுள்ளனர்.

நேற்று முன்தினம் பிற்பகல் இடம்பெற்ற இச்சம்பவத்தில் ரவி, சின்னராசா, சுகந்தன், எட்வின், ராஜு ஆகிய ரெலோ கட்சி உறுப்பினர்களே தாக்குதலுக்கு இலக்காகியோராவர்.

தாம் தேடிவந்த நபர் இல்லையென்று கூறிய இராணுவத்தினர் குறிப்பிட்ட கட்சி உறுப்பினரை கடுமையாகத் தாக்கியதாக வவுனியா தகவல்கள் தெரிவிக்கின்றன.

இராணுவத்தினருடைய இந்நடவடிக்கை தொடர்பாக கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் செட்டிகுளம் இராணுவ அதிகாரியுடன் தொடர்புகொண்டு சம்பவம் தொடர்பாக விளக்கியுள்ளார்.

இராணுவத்தினருடைய இந்நடவடிக்கை தொடர்பில் அதிர்ச்சியுற்றிருக்கும் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய செல்வம் அடைக்கலநாதன் செட்டிகுளம் இராணுவ அதிகாரி பிரிகேடியர் கே.எஸ்.பெர்னாண்டோவை சந்தித்து மேலதிக விடயங்கள் குறித்து விளக்கம் கோரவுள்ளார். (க)

# பாடசாலை அதிபரை காணவில்லையாம்

(திருகோணமலை)

திருகோணமலை மூதூர் ஆமீன்நகர் வித்தியாலயத்தின் உப அதிபரை காணவில்லை என உறவினர்கள் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

வித்தியாலயத்தின் உப அதிபரான கமீர் மௌலவி என்பவர் நேற்று காலையில் இருந்து காணாமல் போயிருக்கின்றார்.

இவர் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டு பகுதியான இறால்குழி நோக்கி சென்றதாக ஆரம்பத்தில் கூறப்பட்டது.

ஆனால் இவர் நேற்று காலை 10.00 மணிக்கு தோப்பூர் பகுதியில் இருந்து தனது மனைவியுடன் கையடக்கத் தொலைபேசியில் கதைத்ததாக கூறப்படுகிறது.

இவர் முன்னர் ஈரோஸ் இயக்கத்தின் உறுப்பினர் என்பதனால் விடுதலைப் புலிகளின் ஆதரவாக செயற்பட்டுள்ளார் என்ற போர்வையில் ஜிகாத் அமைப்பு கொலை செய்து இருக்கலாம் என சந்தேகங்கள் எழுந்துள்ளது. (க)

# பேச்சுக்களை உடன் ஆரம்பிக்காவிட்டால் யுத்தம் ஏற்படுவதை தவிர்க்க முடியாது!

## ஐ.தே.க அரசுக்கு அறிவுரை

(கொழும்பு)

அமைதிப் பேச்சுக்களை தொடங்காவிட்டால் யுத்தம் ஏற்படுவதை தவிர்க்க இயலாது என்று ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

ஐ.தே.க பிரதிப் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க இது குறித்து கருத்து தெரிவிக்கையில்,

கடற்படையினர் மீதான தாக்குதலானது பாரிய யுத்தநிறுத்த ஒப்பந்த மீறலாகும். அமைதி முயற்சியில் புலிகளுக்கு ஈடுபாடில்லை என்பதை இச்சம்பவம் வெளிப்படுத்துகிறது. இந்தத் தாக்குதலை வன்மையாகக் கண்டனம் செய்கிறோம்.

யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை தமிழீழ விடுதலைப் புலிகளும் அரசும் கடைப்பிடிக்க சர்வதேச சமூகம் அழுத்தம் கொடுக்க வேண்டும். வன்முறைகளை நிறுத்தி பேச்சுக்களுக்குத் திரும்ப இரு தரப்பினருக்கும் வலியுறுத்தவேண்டும்.

அமைதியை உருவாக்குவது ஒவ்வொருவரதும் பொறுப்பு. இந்த சிக்கலான நேரத்தில் அனைவரும் ஒருங்கிணைந்து அமைதி வழித் தீர்வை உருவாக்க முன்வரவேண்டும்.

குறிப்பாக அரச படைகள் யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை முறையாக கடைப்பிடித்து பொறுமை காக்க வேண்டும்.

அரச படைகளே யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை மீறி நடந்துவிட்டு புலிகள் மீது மட்டும் குறை கண்டுபிடிக்க முடியாது.

முதலில் அரசபடைகள் முன்மாதிரியாக நடந்து சமாதான நடவடிக்கைகளுக்கு ஆதரவு வழங்கினால் விடுதலைப்புலிகள் கொலைகள் மற்றும் இராணுவத்தினர் மீதான தாக்குதல்களை நிறுத்துவார்கள்.

இந்த விடயம் குறித்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கூடிய கவனம் செலுத்தவேண்டும்.

புலிகள் மீது மட்டும் தவறுகளை கண்டுபிடிக்காது அரச படைகளையும் அமைதியாக இருக்குமாறு உத்தரவிடவேண்டும்.

அப்போதுதான் சர்வதேச சமூகம் யதார்த்தத்தை புரிந்துகொள்ளும். உண்மையிலேயே யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை மீறுபவர்கள் யார் என்பதை சர்வதேச சமூகத்தினர் அறிந்துகொள்வார்கள் என்றார். (க)

# விளையாட்டுப் போட்டிக்கான நிகழ்ச்சி நிரலில் மாற்றங்கள்

(கொழும்பு)

வடக்கு- கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையிலான 11ஆவது மாகாண மட்ட விளையாட்டுப் போட்டிக்கான நிகழ்ச்சி நிரலில் மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இப்புதிய நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் எதிர்வரும் ஜூன் மாதம் 23ஆம் திகதி தொடக்கம் ஜூலை மாதம் 8ஆம் திகதி வரை மாகாணமட்ட போட்டி நிகழ்ச்சிகள் வவுனியாவில் நடைபெறவுள்ளதாகவும் அவர் அறிவித்துள்ளார்.

ஆதலால் போட்டிகளில் பங்குபற்றுவதற்கான விண்ணப்பப்படிவங்களை இம்மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் மாகாண கல்வித் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்குமாறும் கேட்கப்பட்டுள்ளது.

இந்தப் போட்டி நிகழ்ச்சிகளில் மட்டக்களப்பு, அம்பாறை, கல்முனை, திருகோணமலை, கிளிநொச்சி, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, வவுனியா மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த சுமார் 2ஆயிரம் பாடசாலை மாணவர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

2006ஆம் ஆண்டிற்கான பாடசாலைத் தவணை அட்டவணையில் கல்வியமைச்சு மாற்றங்களை செய்தமையினால் மாகாண மட்ட விளையாட்டுப் போட்டிக்குரிய அட்டவணையிலும் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் அறிவித்துள்ளார். (க-9)

# 22 ஆயிரத்து 900 மாணவர்கள் சகல பாடங்களிலும் சித்திபெறவில்லை

கடந்த வருடம் நடைபெற்ற க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றிய 4 இலட்சத்து 49 ஆயிரத்து 679 மாணவர்களில் 22 ஆயிரத்து 900 மாணவர்கள் சகல பாடங்களிலும் சித்தியடையத் தவறியுள்ளதாக பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

பரீட்சையில் 6 பாடத்திற்கும் குறைவான பாடங்களில் தோற்றிய பரீட்சார்த்திகள் 29 ஆயிரத்து 688 மாணவர்கள் சகல பாடங்களிலும் சித்தியடையத் தவறியுள்ளனர்.

இதேவேளை பரீட்சைக்குத் தோற்றிய பரீட்சார்த்திகளில் 46.6 சதவீதத்தினர் உயர்தரம் பயில்வதற்கு தகுதிபெற்றுள்ளதாகவும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அறிவித்துள்ளார். (க-9)

# மோட்டார் சைக்கிள் பாகங்களை கழற்றி படையினர் சோதனை!

வன்னியிலிருந்து யாழ்.குடா நாட்டுக்குள் பிரவேசிக்கும் வாகனங்கள் முகமாலை சோதனைச் சாவடியில் கடும் சோதனைக்குட்படுத்தப்படுகின்றன என்றும் வன்னியிலிருந்து வரும் மோட்டார் சைக்கிள்களின் பாகங்கள் கழற்றப்பட்டு சோதனையிடப்படுகின்றன எனவும் தெரிவிக்கப்படுகின்றன.

மோட்டார் சைக்கிளில் இச்சோதனை சாவடிக்கு ஊடாக பயணிப்போர் தமது உடல், பயணப்பொதி சோதனைகள் முடிவடைந்து பதிவுகளைப் பூர்த்தி செய்த பின்னர் படையினர் முன்னால் தாம் பயணிக்கும் மோட்டார் சைக்கிள் உதிரிப்பாகங்களை கழற்றி காண்பித்த பின்னரே பயணத்தைத் தொடர அனுமதிக்கப்படுகின்றனர்.

இப்புதிய நடைமுறையினால் பயணிகள் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளதாக கூறப்படுகின்றது.

இதேவேளை ஏ-9 வீதியோரத்தில் உள்ள பற்றைகள், மரங்களை கனரக வாகனங்கள் மூலம் படையினர் அழித்து வருகின்றன.

முகமாலைக்கும் மிருசுவிலுக்குமிடையில் வீதியோரங்களில் காணப்படும் சிறிய பற்றைகள், மரங்களே அழிக்கப்பட்டு வருகின்றன. (க)

## இன்று ஒரு தகவல்

### புதையலைப் புரிந்துகொள்

ஓர் இளைஞன் ஒரு சாலையோரமாக இருந்து அழுது கொண்டிருந்தான் அந்தப் பக்கமாக பிச்சை எடுத்துச்சாப்பிடும் ஒருவன் வந்தான் "ஏன் அழுது கொண்டு உட்கார்ந்திருக்கிறாய்?" என்று கேட்டான்· "என்னிடம் ஒன்றுமே இல்லை இந்த உலகத்தில் நான் இருந்து என்ன பிரயோசனம்?"அதுதான் நான் அழுகிறேன் என்றான் அவன் "உன்னிடம் மறைந்திருக்கும் புதையல் என் கண்ணுக்குத்தெரிகிறது. அதை விற்பதற்கு நீ தயாரா?" என்று கேட்டான். இளைஞனுக்கு ஆச்சரியம்"என்னிடம் ஒரு காசு கூட இல்லையே அப்படி இருக்கும்போது புதையல் எங்கிருந்து வந்தது?" என்றான்.

பிச்சைக்காரன் சிரித்தான்· இப்படித்தான் எல்லோரும் சொல்கிறார்கள் நீ என்னுடன் வா நமது ஊர் அரசனிடம் போவோம் உன்னிடமிருக்கும் புதையலை அவன் நல்ல விலைக்கு எடுத்துக்கொள்வான் என்றான். அது எப்படி உனக்குத் தெரியும்? என்றான் இதற்கு முன்பும் இதுபோல பலரை அரசனிடம் அழைத்துக்கொண்டு போயிருக்கிறேன் அதனால் தான் உன்னையும் கூப்பிடுகிறேன் என்றான்.

இவனுக்கு ஒன்றும் புரியவில்லை நம்மிடம் என்ன இருக்கிறது? இவனே பிச்சை எடுத்துச் சாப்பிடுகிறான் இவன் என்னை ராஜாவிடம் அழைத்துப்போகிறேன் என்கிறானே என்று யோசித்தான் என்ன யோசிக்கிறாய்? உனக்குப் பணம் வேண்டுமானால் என்னுடன் வா என்றான் அவன்·சரி இங்கே உட்கார்ந்துகொண்டிருப்பதைவிட அங்கே யாவது போய்ப்பார்ப்போம் என்று புறப்பட்டான்.

அந்த இளைஞனும் பிச்சைக்காரனும் அரண்மனையை நோக்கி நடந்துபோய்க்கொண்டிருக்கிறார்கள். வழியில் அந்த பிச்சைக்காரன் சொன்னான் இதோ பார் முன்பே சில விடயங்களை நாம் பேச வேண்டியிருக்கிறது சரியாக தெளிவாக முடிவெடுத்துக் கொண்டு அதன் பின் ராஜாவிடம் போகவேண்டும் ஏனென்றால் அங்கே போய் அது முடியாது இது மு டியாது என்று சண்டை போட்டுக் கொண்டிருக்கக்கூடாது ராஜாவுக்கு விலையைப் பற்றிக் கவலையே இல்லை. எவ்வளவு சொன்னாலும் நமக்குப் பணம் கிடைக்கும் ஆனால் அதன்பின்பு நான்இதை விற்பதற்கு தயாராக இல்லை என்று சொல்லக்கூடாதுஅதனால் புதையலை விற்பதா இல்லையா என்பதை இங்கேயே தெளிவாக முடிவு செய்து விடவேண்டும்" என்றான்.

இளைஞக்கு ஒன்றுமே புரியவில்லை என்னிடமா புதையல் என்று குழம்பினான் இப்போது அந்தப் பிச்சைக்காரன் சொன்னான் ஆமாம் ! இப்போது உதாரணத்துக்கு உன் கண்களைஎடுத்துக்கொள்... அதற்கு நீ என்ன விலை கேட்டுவிடப் போகிறாய்? நான் அதற்கு அரசனிடமிருந்து 50,000 ரூபா வாங்கித் தர முடியும் இதயத்தைக் கொடுக்கிறாயா?10 இலட்சம் வாங்கித் தருவேன் மூளையைக் கொடுக்கிறாயா 30 இலட்சம் வாங்கித் தருகிறேன் என்றான் இளைஞனுக்குக்·கோபம் வந்துவிட்டது. என்ன உளறுகிறாய்? உனக்கு என்ன பைத்தியமா? கண்ணையும் இருதயத்தையும் மூளையையுமா விற்பார்கள்? என்ன விலை கொடுத்தாலும் அதையெல்லாம் நான் விற்க மாட்டேன். நான் மட்டுல்லயாருமே விற்கமாட்டார்கள் என்றான்.

இப்போது அந்தப் பிச்சைக்காரன் வாய்விட்டுச் சிரித்தான்· இப்போது பைத்தியமானது நானா? நீயா? இலட்சக்கணக்கான ரூபாய் பெறுமான முள்ள பொருட்களை உன்னிடமே வைத்துக்கொண்டு விற்கமுடியாது என்று சொல்கிறாய் நீ நான் ஏழை என்னிடம் ஒன்றுமில்லை என்று மரத்தடியில் உட்கார்ந்து அழுது கொண்டிருக்கிறாயே!" என்றான்.


இன்று பலபேர் தன்னிடம் புதைத்திருக்கும் ஆற்றலைப் புரிந்து கொள்ள முடியாமல் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் புதையலை நாம் தான் தோண்டி எடுக்கவேண்டும் இதைப்புரியவைப்பதற்காக ஒரு பெரியவர் சொன்ன கதை இது நமது ஆட்களெல்லாம் புதையலை உள்ளே தேட மாட் டார்கள் வெளியே எங்காவது கிடைக்குமா என்றுதான் தேடுவது வழக்கம்.

ரயில் நிலையம் பக்கம் ஒரு ஆட்டோ நின்று கொண்டிருந்தது அந்தப் பக்கமாக வந்த ஒருவர் ஆட்டோ சாரதியைப் பார்த்து "ஐயா உங்கள் ஆட்டோவின் பின் சீட்டில் ஒரு பணப்பை கிடக்கிறது... யாரோ மறந்து போய் விட்டு விட்டுப் போயிருக்கிறார்கள் என்றார்.

"இல்லை... இல்லை அது வெறும் பணப்பை நான்தான்அதை அங்கே போட்டு வைத்திருக்கிறேன்" என்றார் சாரதி·"ஏன்?" என்று கேட்டார் இவர் அதைப் பார்க்கும் யாராவது அதை எடுக்கலாம் என்று சவாரிக்கு வருவார்கள் அதற்காகத்தான் என்கிறார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# புலிகள் தொடர்ந்து தாக்குதல் நடத்தினால் நாட்டை பாதுகாக்க நடவடிக்கை எடுப்பேன்



## ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எச்சரிக்கை

(கொழும்பு)

**தமிழீழ விடுதலைப்புலிகள் தொடர்ந்து தாக்குதல் நடத்தினால் நான் எனது நாட்டைப் பாதுகாக்க நடவடிக்கை எடுப்பேன் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எச்சரித்துள்ளார்.**

கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு இது தொடர்பாக அவர் அளித்துள்ள நேர்காணலில்,

நாட்டினது நிலைமை மிகப் பயங்கரமானதாக உள்ளதாகக் கூறுவதை ஒப்புக்கொள்ளவில்லை இருந்தபோதும் அமைதி முயற்சிகளில் நிச்சயமற்றதன்மை நிலவுகிறது. விடுதலைப் புலிகள் பேச்சுக்களுக்கு வருவது குறித்து இன்னமும் முடிவு செய்யவில்லை எங்களுக்குக் கிடைக்கும் சமிக்ஞைகள் வித்தியாசப்படுகின்றன.

நாம் அமைதி முயற்சிகளில் ஈடுபாட்டுடன் உள்ளோம் நிலைமைகள் மோசமடைந்திருப்பதற்கு அவர்கள் காரணம் என்பதை விடுதலைப் புலிகளும் கூட உணர்ந்திருப்பார்கள் இந்த நாட்டு மக்களை அது பாதிக்கிறது.

கடந்த நவம்பரிலும் இத்தகைய நிலைமைகள் இருந்தன. இனப்பிரச்சினை தொடர்பான எனது செயற்பாடுகள் வெளிப்படையானவை எதுவித மறைமுகத்திட்டமோ இரகசியத் திட்டமோ என்னிடம் இல்லை.

தென்பகுதிவடக்கு அல்லது கிழக்கு மக்களுடன் திறந்த மனதுடனேயே உள்ளேன் மக்களால் எளிதில் அணுகக் கூடிய நபர் நான் என்பதில் எனக்கு நம்பிக்கை உள்ளது மக்களினதும் உணர்வுகளை நான் உணர்ந்தவன் அந்த வகையில் எனது வெற்றிக்கு விடுதலைப் புலிகள் உதவியிருந்திருந்தால் சரியீாக இருக்கலாம் ஆனால் எதிர் காலத்திலும் இதே நம்பிக்கையை விடுதலைப் புலிகள் என்மீது வைத்திருக்க வேண்டும்.

யுத்த நிறுத்த ஒப்பந்தம் இன்னமும் நடைமுறையில் உள்ளது அரசாங்கம் அதனை மதித்து நடக்கிறது ஆனால் விடுதலைப்புலிகள் பல சந்தர்ப்பங்களில் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை மீறியுள்ளனர்.

இராணுவத்தினர் மீதும் பொலிஸார் மீதும் அவர்கள் யுத்தநிறுத்த மீறல், குற்றச்சாட்டுக்களை சுமத்துவதை நான் அறிவேன் ஆனால் ஒப்பீட்டளவில் அது குறைவானது. இருந்தபோதும் இராணுவ தளபதியின் மீதான கொலைத் தாக்குதலுடன் ஒப்பிடமுடியுமா?

கடந்த வியாழக்கிழமை கடற்படையினர் மீதான தாக்குதலை எதனுடன் ஒப்பிட முடியும்? லக்ஷ்மன் கதிர்காமர் கொர்லையுடன் எதனை இணைத்துப்பார்க்க முடியும்? இந்தக் கொலைகளை எல்லாம் எதனுடன் இணைத்துப் பார்க்க?

சம்பூரில் ஒரு மட்டுப்படுத்தப்பட்ட நடவடிக்கையை நாம் மேற்கொண்டோம் ஏப்ரல் 25ஆம் திகதி இராணுவத் தலைமையகம்மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தி எமது இராணுவத் தளபதியை கொல்ல முயற்சித்தனர்.

அதே நேரத்தில் திருகோணமலையில் கடற்படையினர் மீது தாக்குதல் நடத்தினர். இவை பாரதூரமானவை மற்றும் நாட்டை அதிர்ச்சிக்குள்ளாக்கியவை இத்தகைய தாக்குதல்கள் மீண்டும் நடைபெறக்கூடாது. எமது நாட்டின் இறையாண்மையையும் பிரதேச ஒற்றுமையையும் பாதுகாக்க வேண்டியது என் பணி.

இந்த நாட்டைப் பாதுகாக்க வேண்டி மக்கள் எனக்கு தீர்ப்பளித்துள்ள்னர் தென்பகுதி, வடக்கு அல்லது கிழக்கில் என எந்தப் பகுதி மக்களானாலும் அவர்களை நான் தொடர்ந்து பாதுகாக்கவேண்டும் இந்த நாட்டினது அனைத்துப் பகுதி மக்களையும் பாதுகாக்கவேண்டும் பொறுப்பிலிருந்து விலக முடியாது.

விடுதலைப் புலிகள் தொடர்ந்து தாக்குதல் நடத்தினால் நான் எனது நாட்டைப் பாதுகாக்க நடவடிக்கை எடுப்பேன் அது வடக்கு,கிழக்கு, தெற்கு மேற்கு என எந்தப் பகுதியாக இருந்தாலும் இதே அர்ப்பணிப்பு டனேயே பாதுகாப்பேன்.

மட்டுப்படுத்த நடவடிக்கைக்கு நாம் உத்தரவிட்டது குறிப்பிட்ட சில நிலைமைகளை இலக்கு வைத்தேதான் எமது அரசபடைகள் மீதும் பொலிஸார் மீதும் எமக்கு முழு நம்பிக்கை உள்ளது அதற்காக நாம் யுத்த நிறுத் தத்தை ஏற்றுக்கொள்ளவில்லை என்பது அர்த்தம் இல்லை மற்றொரு யுத்தம் வரக்கூடாது என்பதற்காகவே தாக்குதல் நடத்தப்பட்டது.

எமது இராணுவத் தலைமையகம் மீதான தாக்குதலை நடத்தி எம்மீது பகிரங்கப் போர்ப்பிரகடனத்தை தமிழீழ விடுதலைப் புலிகள் வெளியிட்டுள்ளனர் ஆனால் பொறுப்புள்ள அரசாங்கத்தின் தலைவர் என்ற முறையில் யுத்த நிறுத்தத்தை தொடரவும் மதித்தும் செயற்படவேண்டும். கௌரவமான தீர்வு என்பது எளிதாக அடைந்துவிட முடியாதது. நோர்வே அனுசரணையாளர்கள் தங்களது பணியைச் சிறப்பாகவே செய்கின்றனர்.

எந்த ஒரு கட்சியையும் தவிர்க்காமல் அனைத்து கட்சிகளையும் இணைத்துத்தான் தேசிய அரசாங்கம் அமைக்க முடியும் அது சூழ்நிலையைப் பொறுத்தது. அதற்கு அப்பால் தேசிய அரசாங்கம் என்பது சர்வாதிகாரத்துக்கான வழிவகுக்கக் கூடியது அப்பாடியான ஒன்று நிகழ் வதை நான் விரும்பவில்லை.

எதிர்க்கட்சி என்பது ஒன்று இருக்க வேண்டும் அதனது பார்வையையும் நாம் கேட்கவேண்டும் தடைகளும் சமன்களும் இருக்க வேண்டும் பொதுவிடயங்களில் பொதுத்தடத்தில் இணைவது என்பது வேறு.

இனப்பிரச்சினையில் நாம் அதைத்தான் செய்து கொண்டிருக்கின்றோம் பயங்கரவாதம் மற்றும் வன்முறைகளுக்குத் தீர்வு காண நாம் அதையே செய்து கொண்டிருக்கிறோம் இந்த வழிமுறையானது பொதுவிடயங்களில் ஒரு மித்த கருத்தை பாரிய அளவில் ஏற்படுத்தும் இதிலும் பல்வேறு விமர்சனங்களுக்கு இடம்உண்டு.

தமிழீழ விடுதலைப் புலிகள் தங்களது வன்முறைகளைக் கைவிட வேண்டும் என்று எப்போதுமே கூறி வருகிறேன் சர்வதேச சமூகமும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும்.

இனப்பிரச்சினை என்பதை சர்வதேசப் பிரச்சினையாக்கக் கூடாது என்பது என தனிப்பட்ட கருத்து அதற்கு உள்நாட்டிலேயே பேசி தீர்வு காண வேண்டும் என் னைப் பொறுத்த வரையில் சர்வதேசத்தின் தலையீடு தேவையில்லை.

தமிழ் பேசும் மக்களினது பிரச்சினைகள் என்ன என்பது எனக்குப்புரிகிறது விடுதலைப்புலிகள்பேச்சுமேசைக்கு கொண்டுவரப்படவேண்டும் அவர்கள் எம்முடன் பேச வேண்டும் என்றார். (கு)

## 65 பேர் போராட்டத்தில் இணைவு

திருப்பழுகாமத்திலிருந்து அறுபந்தைந்து பேர் தமிழீழ விடுதலைப்போராட்டத்தில் இணைந்துள்ளனர். திருப்பழுகாமத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் நடைபெற்ற சமகால அரசியல் நிலவரம் தொடர்பான கலந்துரையாடலை அடுத்து இவர்கள் போராட்டத்தில் இணைந்து கொண்டனர். இவர்கள் அனைவரும் தேசிய துணைப் படைக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.





நேற்று முன்தினம் பிற்பகல் 4.30 மணியளவில் திருப்பழுகாமம் கிராம மக்களுக்கான கலந்துரையாடல் இடம்பெற்றது.

பட்டிருப்பு கோட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் செல்வா தலைமையில் பழுகாமம் கண்டுமணி மகாவித்தியால விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற இவ் விழிப்பூட்டல் கலந்துரையாடலில் மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் தயாமோகன் லெப்டினல் ராஜன் பயிற்சிக்கல்லூரி ஆசிரியர் கீதன், வெல்லா வெளிக் கோட்ட தளபதி யோகராஜ் ஆகியோர் கலந்துகொண்டு மக்களுக்கு இன்றைய சமகால அரசியல் நிலவரம் பற்றி விளக் கினார்கள். (கு)

## மிதிவெடியில் சிக்கி ஒருவர் காயம்

(யாழ்ப்பாணம்)

மிதிவெடியில் சிக்கிய ஒருவர் தனது இடதுகால் துண்டிக்கப்பட்ட நிலையில் யாழ். போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். நேற்று முன்தினம் 5.30 மணியளவில் யாழ். அளவெட்டிப் பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சங்கரப்பிள்ளை விவேகானந்தா (வயது 58) என்பவரே மிதிவெடியில் சிக்கியவரென தெரிவிக்கப்படுகிறது.


இச்சம்பவம் இடம்பெற்ற அளவெட்டிப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் கண்ணிவெடிகளை அகற்றிய ஹலோரஸ்ட் நிறுவனம் கண்ணிவெடிகளை அகற்றி அப்பிரதேசத்தை மீள மக்கள் பாவனைக்கு வழங்கியிருந்தது.

இவ்வாறு வழங்கப்பட்ட பிரதேசத்திலே மேற்படி சம்பவம் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (கு)

# நெல்சன் மண்டேலா

த. பாண்டியன்

## மீள்பார்வை



### லண்டனில் 41

அங்கிருந்து டார் -எஸ் சலாம் சென்றார். எத்தியோப்பியாவில் பயிற்சி பெற முப்பது எம்கே படைவீரர்கள் அங்கு போகத் தயாராக இருந்தனர். அவர்கள் வரிசையில் நின்று சலூட் அடித்தனர். அவரது சொந்தப் படையின் சொந்த வீரர்கள் சலூட் அடித்தனர்.

இதையடுத்து தலைவர் நைரரே ஒரு தனி விமானத்தில் மண்டேலா, லோபாட்சே போக ஏற்பாடு செய்தார். ஆனால் விமானி கேன்யே என்ற இடத்தில் இறக்கினார். போதாக்குறைக்கு வெள்ளைநிற மாஜிஸ்திரேட் ஒருவர் ''நீ தான் நெல்சன் மண்டேலாவா?'' எனக் கேட்டது அதிர்ச்சியைத் தந்தது. 'உன் உண்மையான பெயரைச் சொல் ஏனெனில் உனக்காகத் தான் காத்து இருக்கிறோம் . தென்னாபிரிக்க பொலிஸ் உன்னைப் பிடிக்கக் காத்திருக்கிறது எனவே நாங்கள் கூறுகிற வழியில் உன் நாட்டிற்குத் திரும்ப வேண்டி இருக்கும்' என்று சொன்ன போதுதான் உயிர்மூச்சே திரும்பியது. அங்கு வாழ்ந்து வந்த செசில் வில்லியம்ஸ் என்ற திரைப்பட இயக்குநருடன் அவருடைய ஓட்டுநர் வேடத்தில் ஜோகன்ஸ்பர்க்கை நோக்கி காரில் ஓட்டுநராக உட்கார்ந்தார் மண்டேலா.

### மீண்டும் தாய் மண்ணில்

பல நாட்டுத் தலைவர்களையும் சந்தித்து நிதியுதவி, ஆயுத உதவி, பயிற்சிக்கான வாய்ப்பு ஆகியவற்றைப் பற்றிப் பேசி, பெற்ற பணத்துடன் தாய்நாட்டுக்குத் திரும்பினார் மண்டேலா. நாட்டின் எல்லைக்குள் காவல்துறையின் கண்ணில் படாமல், பிடிபடாமல் மண்டேலாவும் செசிலும் நுழைந்து விட்டனர். நேராக லிலீஸ்லீவ் பண்ணைக்கு விரைந்தனர்.

அன்றிரவு வால்ட்டர், மோசஸ் கோட்டானே, கோவன் முபேக்கி , டான் டூல்மே , ஜே.பி.மார்க்ஸ் , டூமா நோக்வே ஆகியோர் ரகசியக்கூட்டத்திற்காக வந்தனர் . தனது பயண விவரங்களையும் பணக் கணக்கையும் இராணுவப் பயிற்சிக்குக் கிடைத்துள்ள வாய்ப்புக்களையும் விளக்கினார். பல நாட்டுத் தலைவர்கள் சுத்த ஆபிரிக்கக் காங்கிரஸின் ஆபிரிக்க தேசியம் தெளிவாக இருக்கும் போது தென்னாபிரிக்க காங்கிரஸ் இந்தியர் , வெள்ளையர் ஆகியோரையும் கட்சியில் சேர்த்திருப்பது குழப்பத்தை விளைவிப்பதற்காக கூறியதாகவும் அதைவிட கம்யூனிஸ்டுகளின் கூட்டுப்பற்றி பலர் பயப் படுவதாகவும் எதிர்ப்பதாகவும் கூறினார்.

எனவே ஆலிவரும் தானும் தென் ஆபிரிக்கக் காங்கிரசும் சகோதரக் கட்சிகளுடன் உறவை முறிக்காமல் , ஆனால் அதே நேரத்தில் தனித்து இயங்கவேண்டும் என விரும்புவதாகவும் கூறினார். அதன் மீது விவாதம் நடந்தது. இறுதியாக தலைவர் லுதுலியைச் சந்தித்து இவற்றைக் கூறிடவேண்டும் என முடிவு செய்யப்பட்டது. கோவன் முபேக்கி மட்டும் இந்த யோசனையை எதிர்த்தார். மண்டேலா இப்பொழுதுதான் தாய்நாடு திரும்பியுள்ளார். நமது படைக்கும் அவரது தலைமை முக்கியம் . இதை மறந்து இப்பொழுது பல இடங்களுக்கும் அனுப்புவது நல்லதல்ல எனக் கூறியதை மண்டேலா உட்பட எல் லோரும் நிராகரித்துவிட்டனர்.

நள்ளிரவில் ரிவோனியாவை விட்டு கார் ஓட்டுநர் என்ற முறையில் மண்டேலாவும் உரிமையாளர் என்ற முறையில் செசிலும் புறப்பட்டனர் . முதலில் டர்பனுக்குப் போய் மாண்ட்டி நாய்கரையும் ,இஸ்மாயில் மீரையும் சந்திக்க விரும்பினர். இவர்கள் இருவரும் லுதுலியின் நெருங்கிய நண்பர்கள். இவர்களது கருத்துக்கு லுதுலி மதிப்புக் கொடுப்பார் .எனவே இவர்களிடம் முதலில் பயண அனுபவத்தோடு ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் தனித்து இயங்குவது போலக் காட்டவேண்டிய தேவை எழுந்திருப்பதை விளக்கினார் மண்டேலா. இருவரும் திகைப்படைந்தனர் .இந்தியர்களையும் கம்யூனிஸ்டுகளையும் ஒதுக்கி விடுவதா? சரி லுதுலியிடம் பேசலாம் எனக்கூறிவிட்டனர்.

டர்பனில் இருந்த ஓர் இந்தியப் பெண்மணியின் வீட்டில் ரகசியமாக லுதுலியைச் சந்திக்க ஏற்பாடாயிற்று. மண்டேலா சொல்வதை லுதுலி அமைதியாகக் குறுக்கிடாமல் கேட்டுக்கொண்டிருந்தார். மண்டேலா தனது அறிக்கையை முடித்தவுடன் லுதுலி மிக நிதானமாகப் பேசத் தொடங்கினார். சில வெளிநாட்டுத் தலைவர்களுக்குப் பிடிக்கவில்லை என்பதற்காக , ஐம்பதாண்டு அனுபவத்தில் நாம் உருவாக்கிய அனைத்து இன மக்களையும் உள்ளடக்கிய ஜனநாயகக் குடியரசு என்ற நமது கொள்கையை நாம் மாற்ற வேண்டும் என்பது நியாயமான காரணம் அல்ல. நாம் என்ன கொள்கையைக்கடைப்பிடிக்கவேண்டும் எனப் பிற நாட்டார் உத்தரவிடுவதும் ஏற்கத்தக்கது அல்ல என்று கூறினார்.

மண்டேலா பதில்கூறும்போது , ''பிற நாட்டுத் தலைவர்கள் உத்தரவு போடுகிறார்கள் எனக்கூற முடியாது. அவர்கள் புரிந்து கொள்ளமுடியாமல் குழம்புகிறார்கள். எனவே குழப்பத்தைத் தவிர்க்க பூச்சு வேலை மாதிரி நம் தோழமை சகோதரக் கட்சிகளுடன் நீடிக்கும் போதே ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் , தனித்து தலைமை தாங்கி நடத்துவது மாதிரி வெளியில் காட்டலாம் என்ற யோசனையைக் கூறினார். லுதுலி எந்தக் கருத்தையும் உடனே ஏற்கவோ மறுக்கவோ மாட்டார். இன்றும் சரி இது பற்றி யோசிக்கலாம் ''எனக் கூறிவிட்டு பத்திரமாகப் போய்வா கவனம் கவனம்! எனக் கூறிவழியனுப்பினார்.

அன்றிரவே வேறு சில ரகசியப் சந்திப்புக்களுக்கும் மண்டேலா ஏற்பாடு செய்திருந்தார். அங்கு இரகசியப் படையின் வட்டாரத் தலைமையும் இருந்தது. அங்கு பேசியதில் நாசவேலை பலன் தராவிட்டால் அடுத்த கட்டமாக கொரில்லா முறைக்கு மாற வேண்டும் என்ற கருத்து தெரிவிக்கப்பட்டது. பின்னர் பத்திரிகை புகைப்படக்காரர் ஜி.ஆர் .நாய்டு வீட்டில் , இஸ்மாயில் , பாத்திமா மீர் , மாண்ட்டி நாய்கர் , ஜே.என் சிங்க ஆகியோரைச் சந்தித்துப் பேசினார். அங்கிருந்து ஜோகன்ஸ்பர்க் திரும்பும் போது வின்னியையும் குழந்தைகளையும் ரகசியமாகச் சந்தித்து விடலாம் என நினைத்தார். அழகான இடங்களைப் பார்க்கும் போது , வின்னியையும் குழந்தைகளையும் அழைத்துக்கொண்டு வந்து காட்ட வேண்டும் என நினைப்பது உண்டு. ஆனால் கண்டதை வருணித்ததோடு சரி!

போகும் வழியில் எங்கெல்லாம் நாசவேலை செய்யலாம் எனப் பேசிக்கொண்டே போனார்கள். திடீரென ஒரு போர்டு- 8 கார் வெள்ளைக்காரர்களுடன் வேகமாக முந்திக்கொண்டு போனது. அதைத் தொடர்ந்து மேலும் இரண்டு கார்கள் வந்தன. ஒரு கார் இவர்களது காரை மடக்கி நிறுத்தியது. வெள்ளைப் பொலிஸ்காரர் மண்டேலாவை நோக்கி நேராக வந்தார். மடக்கிப் பிடிப்பதற்குச் சரியான இடத்தை காவல் துறையினர் தேர்ந்தெடுத்திருந்தனர். தப்பியோடவழி இல்லாத இடம். இடது பக்கம் அடர்ந்த காடு. காரை ஓட்டிச் செல்ல முடியாது. ஓடலாம். கட்டாய ம் சுட்டு விடுவார்கள். எனவே மண்டேலா தனது பயணம் முடிவுக்கு வந்துவிட்டதையுணர்ந்து அமைதியாக இருந்தார்.

சார்ஜண்ட் உன் பெயர் என்ன என்று கேட்டார் . தனது தலைமறைவுக் காலப் பெயரான டேவிட் மோட்சமாயி என்றார். சார்ஜண்ட் வொர்ஸ்டர் நீ தான் மண்டேலா. நீ தான் செசில். இதோ வாரண்ட் இருவரையும் கைது செய்துள்ளேன் என்றார். (தொடரும்)

# தற்காப்புப் பயிற்சி கலந்துரையாடல்கள்

(கிளிநொச்சி)

மட்டக்களப்பு உன்னிச்சை பிரதேசத்திலுள்ள கிராம மக்களுக்கான விழிப்பூட்டல் கருத்தரங்கு கடந்தவெள்ளிக்கிழமை உன்னிச்சை குளம் சித்திவிநாயகர் ஆலய முன்றலில் பிற்பகல் 3 மணியளவில் மாவட்ட கலை பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் தமிழார்வன் தலைமையில் இடம்பெற்றது.

ஆலயத்தின் விசேட பூசை ஆராதனையுடன் ஆரம்பமான இந் நிகழ்வில் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் தயாமோகன், தலைமைச் செயலகப் பொறுப்பாளர் அமுதன் , கரடியனாறு கோட்ட அரசியல்துறைப்பொறுப்பாளர் சோழன் மற்றும் கரவெட்டியாறு 8ஆம் கட்டை உன்னிச்சை இராஜநகர் போன்ற கிராம மக்கள் , போராளிகள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

இதில் சமகால அரசியல் நிலவரம் பற்றியும் தற்காப்பு பயிற்சியின் முக்கியத்துவம் பற்றியும் கடந்த போர்ச்சூழல் காலத்தில் இடம் பெற்ற வன்முறைச்சம்பவங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

★ ★ ★

பட்டிப்பளை பிரதேச மீனவர் சங்க உறுப்பினர்களுக்கான தற்காப்புப் பயிற்சி தொடர்பான விழிப்பூட்டல் கருத்தரங்கு கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் கொக்கட்டிச்சோலை இராம கிருஷ்ணமிஷன் வித்தியாலய ஒன்றுகூடல் மண்டபத்தில் நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட கடல்வளப் பொறுப்பாளர் ஈழமறவன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட ஊரக மேம்பாட்டு பேரவை இணைப்பாளர் சி.அரிகரன், மட்டக்களப்பு மாவட்ட இசைக்குழுப் பொறுப்பாளர் அனந்தவர்மன், மாவீரர் குடும்பநலக் காப்பகப் பொறுப்பாளர் ஐங்கரன், டாக்டர் பன்னீர்ச்செல்வம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இக்கருத்தரங்கில் இன்றைய சமகால அரசியல் நிலவரம் பற்றியும்கிராமமுன்னேற்றவேலைத்திட்டங்கள் தொடர்பாகவும் இன்றைய பேச்சு வார்த்தைகள் தொடர்பாகவும் தங்களை எப்படி பாதுகாத்துக் கொள்ள வேண்டும்என்பது பற்றியும் கொலைகள், ஆட்கடத்தல் ,அச்சுறுத்தல், மிரட்டல் போன்ற விடயங்களிலி ருந்து தாங்கள் மீள வேண் டும் என்பது பற்றியும் கலந்துரையாடப்பட்டது.

இதில் ஊரக மேம்பாட்டுப் பேரவை இணைப்பாளர் சி.அரிகரன், இசைக்குழுப்பொறுப்பாளர் அனந்தவர்மன், மாவீரர் குடும்ப நலக்காப்பகப் பொறுப்பாளர் ஐங்கரன் , டாக்டர் பன்னீர்ச்செல்வம் ஆகியோர் கருத்துரை வழங்கினர். இதில் நூற்றுக்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

★ ★ ★

வவுணதீவு பிரதேசத்துக்குட்பட்ட பருத்திச்சேனை மக்களுக்கான தற்காப்பு பயிற்சி தொடர்பான கருத்தரங்கு கடந்த வெள்ளிக்கிழமை கரடியனாறு கோட்ட பொருண்மியப் பொறுப்பாளர் ஜெயபால் தலைமையில் நடைபெற்றது.

இன்றைய சமகால நிலவரம் பற்றியும் தற்காப்பு பயிற்சி பற்றியும் அதன் முக்கியத்துவம் பற்றியும் கலந்துரையாடப்பட்டது. நன்னீர் மீனவர் திட்டமிடல் பொறுப்பாளர் லக்கிராஜ், பொருண்மிய மேம்பாட்டு பேரவைத் பொறுப்பாளர் தரணி, மாவடி முன்மாரிக்கோட்ட பொருண்மியப் பொறுப்பாளர் பார்த்தீபன் ஆகியோர் கருத்துரை வழங்கினர்.

இரு நூறுக்கும் மேற்பட்ட பொது மக்களும் போராளிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

★ ★ ★

வவுணதீவுப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட கரையாக்கன்தீவு மக்களுக்கான தற்காப்பு பயிற்சி தொடர்பான கருத்தரங்கு கடந்த வெள்ளிக்கிழமை காலை 8 மணியளவில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட பொருண்மிய மேம்பாட்டு பேரவைப் பொறுப்பாளர் தரணியின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கரடியனாறு கோட்ட பொருண்மிய பொறுப்பாளர் ஜெயபால், நன்னீர் மீனவர் திட்டமிடல் பொறுப்பாளர் லக்கிராஜ் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இன்றைய சமகால அரசியல் நிலவரம் பற்றியும் கிராமிய முன்னேற்ற வேலைத்திட்டங்கள்தொடர்பாகவும் தற்காப்பு பயிற்சியின் முக்கியத்துவம் பற்றியும் கலந்துரையாடப்பட்டது.

இக் கருத்தரங்கில் பொருண்மியமேம்பாட்டுபேரவைப்பொறுப்பாளர் தரணி ,மாவடிமுன்மாரிக் கோட்ட பொருண்மியப்பொறுப்பாளர் பார்த்தீபன், கரடியனாறு கோட்ட பொருண்மியப் பொறுப்பாளர் ஜெயபால், நன்னீர் மீனவர் திட்டமிடல் பொறுப்பாளர் லக்கிராஜ் ஆகியோர் தற்காப்புபயிற்சி தொடர்பான கருத்துரை வழங்கினர். இதில் நூற்றுக்கும் மேற்பட்ட பொது மக்கள் கலந்து கொண்டனர். (கு)

# கருணா அணி உறுப்பினர் சுட்டுக்கொலை

(மட்டக்களப்பு)

கருணா அணி உறுப்பினர் ஒருவர் மட்டக்களப்பு மாவட்டம் காத்தான்குடிப் பகுதியில் வைத்து நேற்று முன்தினம் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

குறித்த உறுப்பினர் தனது சகாவுடன் உந்துருளியில் சென்று கொண்டிருந்த போது அடையாளம் தெரியாத இரு நபர்கள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் பலியானார்.

இவரது சடலம் காத்தான்குடி மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

இதேவேளை சம்பவம் நடைபெற்ற பகுதியிலிருந்து 9மி.மீ கைத்துப்பக்கி ஒன்றும் ரி.56 ரக துப்பாக்கியொன்றும் பொலிஸார் மீட்டுள்ளனர். (கு)

# இலங்கையில் தொடரும் வன்முறைகள்; சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் கவலை

இலங்கையில் அதிகரித்து வரும் வன்முறைகள் குறித்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் தனது ஆழ்ந்த கவலையை வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில்,

இலங்கையின் நிலைமைகள் மிகவும் மோசமடைந்து பொதுமக்களை மிகவும் பாதித்து வருகின்றது. இப் பிரச்சினையுடன் தொடர்புடைய இரு தரப்பினரும் சர்வதேச மனிதாபிமானச் சட்டங்களை மதித்து நடக்க வேண்டும். அண்மையில் வன்முறைகளால் பாதிக்கப்பட்ட இடங்களை சர்வதேச செஞ்சிலுவைச்சங்கக் குழுவினர் பார்வையிட்டனர். அத்துடன் பொதுமக்களைப் பாதுகாப்பதிலும் பொதுமக்களுக்கான மருத்துவ உதவி, தங்குமிட வசதி உள்ளிட்டவற்றை மேற்கொள்வது தொடர்பாக கவனம் செலுத்தி வருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (கு)



அல்லைப்பிட்டியில் நேற்று முன்தினம் இரவு கடற்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டவர்களையும், அவர்களின் உறவினர்கள் கதறி அழுவதையும், தந்தையை இழந்த சோகத்தில் இருக்கும் பிஞ்சுக்குழந்தைகளையும், இச் சம்பவத்தால் அச்சமுற்று அப்பகுதி மக்கள் இடம் பெயருவதையும், கடைஒன்று அடித்து நொருக்கப்பட்டிருப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- சதீஸ்)

## கருங்கல் உடைத்தமையினாலேயே வீடுகளில் வெடிப்புகள் ஏற்பட்டதாம்

(கொழும்பு)

மாத்தளை பிரதேசத்தில் இயங்கிவரும் கருங்கல் உடைக்கும் செயற்பாட்டால் சூழலுக்கு அச்சுறுத்தல் ஏற்படுவதுடன் இப்பகுதி வீடுகளில் பாரிய வெடிப்புகள் ஏற்படுவதற்கு இவையே காரணமாக உள்ளதால் இவற்றை உடன் தடைசெய்யும்படி பாதிக்கப்பட்ட மக்கள் அரசிடம் வேண்டியுள்ளனர்.

அண்மைக் காலமாக மாத்தளை மாவட்ட பல பிரதேசங்களில் சுமார் 500ற்கும் மேற்பட்ட வீடுகளின் சுவர்களிலும், நிலத்திலும் பாரிய வெடிப்புக்கள் ஏற்பட்டு வீட்டில் குடியிருக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இச்சம்பவத்தை கண்டறிய நேரில் விஜயம் செய்த தேசிய அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த சமரசிங்ஹவிடம் மக்கள் மேற்படி வேண்டுகோள்களை விடுத்துள்ளனர். கருங்கல் உடைக்கும் நிலையங்களில் அடிக்கடி வைக்கப்படும் டைனமைற் வெடிகளால் தினமும் தாம் பாதிக்கப்படுவது மாத்திரமல்லாமல், இவற்றிலிருந்து அவ்வப்போது கிளம்பும் தூசியினால் பல நோய்கள் ஏற்படுவதாகவும் இம்மக்கள் அமைச்சர் மஹிந்த சமரசிங்ஹவிடம் எடுத்துக்கூறினர்.

இப்பகுதிகளில் சட்டவிரோத கருங்கல் உற்பத்தியில் ஈடுபடுவோர் அதிகம் காணப்படுகின்றனர். இது சம்பந்தமாக உரிய அதிகாரிகளுக்கு எழுத்து மூலம் அறிவித்தும் அவர்கள் எதுவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளாமல் அலட்சியமாக இருந்தமையே தமக்கு இந்த துர்ப்பாக்கிய நிலை ஏற்படக்காரணம் எனவும் பாதிக்கப்பட்ட மக்கள் அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வந்தனர்.

இதையடுத்து இது சம்பந்தமாக உடன் விசாரணைகளை மேற்கொண்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அமைச்சர் அதிகாரிகளைப் பணித்துள்ளார். (க-9)

## சமுர்த்தி உத்தியோகத்தர் பதவி வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் மாகாண பிரதேச செயலகப் பிரிவுகளில் தற்போது நிலவும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக இலங்கை சமுர்த்தி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, அம்பாறை, திருகோணமலை ஆகிய மாவட்டங்களிலேயே இந்த சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவி வெற்றிடங்கள் அதிகளவில் காணப்படுவதாகவும், புதிய நியமனங்களின் போது குறித்த மாவட்டங்களைச் சேர்ந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

விண்ணப்பங்கள் எதிர்வரும் 26ஆம் திகதிக்கு முன்னர் பத்திரமுல்ல இசுறுபாய 4ஆவது மாடியில் அமைந்துள்ள சமுர்த்தி அதிகாரசபை அலுவலகத்திற்கு அனுப்பிவைக்கப்பட வேண்டுமென பணிப்பாளர் நாயகம் கேட்டுள்ளார். (க-9)

## இரண்டாம் திருமுறை முற்றோதல்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைத் திருமுறை மன்றம் நால்வர் பெருமக்களை எழுந்தருளப் பண்ணி மாதம் ஒருகோயில், மாதம் ஒரு திருமுறை முற்றோதல் என்ற வகையில் பன்னிரண்டு மாதமும் பன்னிரண்டு திருமுறை முழுவதும் முற்றோதி வருகின்றது.

அதன்படி வைகாசி மாதம் முழுவதும் 15.05.2006 முதல் 15-6-2006வரையும் யாழ்ப்பாணம் நீராவியடி சிவகுருநாதன் வீதி தோப்பு ஸ்ரீமாணிக்கப்பிள்ளையார் ஆலயத்தில் தினமும் மாலை 5.00 மணிக்கு மாலைப் பூசையைத் தொடர்ந்து இடம்பெறும். (க)

## கைது

(திருகோணமலை)

திருகோணமலை தோப்பு இரா ணுவ முகாமில் நேற்று முன்தினம் தமிழீழவிடுதலைப்புலிகள் அமைப்பைச் சேர்ந்த இருவர் சரணடைந் துள்ளதாக பாதுகாப்புப் படையினர் தெரிவித்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் இவர்கள் இருவரும் சரணடைந்துள்ளனர் என படையினர் கூறுகின்றனர்.

இதேவேளை, அன்புவழிப் புரத்தில் நேற்றுமுன் தினம் மேற் கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் போது பலர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுகின்றனது. (க-9)

## செரண்டிப் புலமைப் பரிசிலுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

செரண்டிப் புலமைப் பரிசில் நிதியம் பின்வரும் கற்கை நெறிகளுக்கான புலமைப் பரிசில்களை வழங்குவதற்காக வருமானம் குறைந்த திறமையான மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

க.பொ.த.உயர்தரம் 2008ஆம் ஆண்டு பரீட்சார்த்திகள் மாத்திரம் விண்ணப்பிக்க முடியும். ஷரீஆமார்க்கக் கல்வி தொழில்நுட்ப டிப்ளோமா துறைசார் கல்வி நெறிகள், பல்கலைக்கழக கற்கை நெறி என்பனவாகும்.

விண்ணப்பப் படிவங்களை www.ssf-lanka.com என்ற இணையத்தளத்திலிருந்து அல்லது சுய விலாசமிடப்படாத முத்திரையிடப்பட்ட கடித உறையினை நிர்வாகச் செயலாளர் செரண்டிப் புலமைப் பரிசில் நிதியம், 204/1 தெமட கொடவீதி, கொழும்பு -09 என்ற முகவரிக்கு அனுப்புவதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம். (க-9)

## சுனாமி எச்சரிக்கை பயிற்சியில் இலங்கையரும் பங்குபற்றுவார்கள்

சுனாமி கடல் சீற்றம் தொடர்பான எச்சரிக்கை பயிற்சி நடவடிக்கைகளில் இலங்கையின் பிரதிநிதிகளும் கலந்துகொள்ளவிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. பசுபிக் கடற்பிராந்திய நாடுகள் இணைந்து மேற்கொள்ளும் இந்தப் பயிற்சி நடவடிக்கைகள் பிலிப்பைன்ஸில் நாளையும் நாளை மறுதினமும் நடைபெறவுள்ளது.

இந்தப் பயிற்சி நடவடிக்கைகளின் மூலம் சுனாமி கடல் சீற்றம் ஒன்று மீண்டும் தாக்கும் சந்தர்ப்பத்தில் மக்களை பாதுகாப்பது குறித்த உறுதியான விளக்கங்களை பெற முடியுமென்றும் தெரிவிக்கின்றது. இந்தப் பயிற்சி நடவடிக்கைகளில் பசுபிக் சமுத்திரத்தையும் தென் பசுபிக் பிராந்தியத்தையும் சோந்த 28 நாடுகள் பங்குகொள்ளவிருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (க-9)

துக்கப்படுவது எந்த பிரச்சினையையும் தீர்த்து விடாது.

-ராஜாஜி

வலம்புரி

## இரத்தத்தை உறையவைக்கும் இரவு நேரப் படுகொலைகள்

தீவகத்தில் நேற்று முன்தினம் இரவு நடந்த படுகொலைகள் இரத்தத்தையே உறைய வைத்தன.

தீவுப்பகுதியில் உள்ள அல்லைப்பட்டி, வேலணை, புளியங்கூடல் ஆகிய இடங்களில் நடந்த இப்படுகொலைகள் மனித வாழ்வை கேள்விக்குறியாக்கியுள்ளன.

அல்லைப்பிட்டியில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த எட்டுப் பேர் உட்பட 9 பேர் இரவோடு இரவாக நடந்த உயிர்க்குடிப்பிற்கு பலியாகிப்போனார்கள்.

இதில் இரண்டு குழந்தைகளும் பலியான செய்தி அதன் கோரத்தனத்தை வெளிப்படுத்துகிறது. இப்படியெல்லாம் ஏன் நடக்கின்றது? இதற்கு முடிவே இல்லையா? உலக நாடுகள் மௌனமான இருப்பது எதற்காக? இந்த கேள்விகள் தமிழ் மக்களின் இதயத்துடிப்பாக வெடிக்கிறது.

என்ன செய்வது சுற்றிவரக் காத்திருக்கும் துப்பாக்கிகளின் இலக்குகளுக்கு இலக்காகிவிடக்கூடாது என்பதற்காக மௌனித்துப் போயுள்ளனர் அவர்கள்.

உறங்கும் வேளையில் உலாவுகின்ற உயிர்க் குடிப்பில் இருந்து எங்ஙனம் தப்புவதென்பதே தமிழ் மக்களின் இப்போதைய ஏக்கம்.

சிறுவர் உரிமைகள், அன்னையர் தினங்கள் எல்லாம் அழகாகக் கொண்டாடப்படுகின்ற வேளையில் இலங்கைத் தீவில் தமிழர் தாயகத்தில் மட்டும் ஏன் இந்தப்படுகொலைகள்?

குடும்பமாக கொலை செய்யும் அளவிற்கு கோர தாண்டவமாடும் கொலைத் தனத்தை நிறுத்த உலகமே குரல் கொடு. நாதியற்றுப் போன தமிழ் இனத்தின் உயிர்காக்க மனித நேயமே நீ மறந்தது ஏன்?

சமாதானம் என்ற சுருதியுடன் பதவியைப் பற்றிப்பிடித்த ஜனாதிபதி மகிந்தராஜபக்ஷ அவர்களே! தமிழர் பகுதியில் நடக்கும் கொலைகள் தங்களுக்குத் தெரியாதவையா?

உறங்கும் வேளையில் நடக்கின்ற படுகொலைகளைத் தடுக்க தாங்கள் ஏதேனும் நடவடிக்கை எடுத்தீர்களா? குழந்தைகளுக்கும் தள்ளாடும் கிழவர்களுக்கும் துப்பாக்கிச் சூடு நடக்கிறதே அது ஏன்?

வடக்கின் தீவகப்பகுதி பல வருடங்களாக கடற்படையின் கட்டுப்பாட்டிற்குள் இருக்கின்றது. அங்கிருக்கின்ற மக்கள் நீண்டகாலமாக இடம்பெயர்ந்து அகதி முகாம்களிலும் உறவினர்களின் வீடுகளிலும் இருந்து விட்டு 1996ஆம் ஆண்டின் பிற்பகுதியி இருந்து தங்கள் பகுதியில் மீளக்குடியேறியுள்ளனர்.

இவ்வாறு நம்பிக்கையோடு குடியேறியவர்கள் கொடூரமாக கொலை செய்யப்படுகின்றார்களாயின் அதற்கு பொறுப்பு கூறவேண்டியவர்கள் யார்?

நடக்கின்ற கொலைகளுக்கு காரணமே தெரியாது. எந்நேரமும் எதுவும் நடக்கலாம். விடிந்தால் உயிரோடு இருந்தால் எழுந்து கொள். அதுவே இப்போதைக்கு கூறக்கூடிய வார்த்தையாக தமிழர் தாயகத்தில் இருக்கும்போது மக்கள் எவ்வாறு நிம்மதியாக உறங்கலாம்?

ஓ! தமிழகத்தின் முதல்வரே! ஆற்றாது அழுகின்றனர் ஈழத்தமிழர். உடன்பிறப்பென்பாயே, உதிரம் கொட்டுதென்பாயே, ஏன் மௌனமாக இருக்கிறாய். ஆம் பதவியேற்ற களைப்பா? அல்லது வெற்றிவாகை சூடிய களிப்பா?

நேற்றுத்தானே!... என்று நினைத்து விடாதே அது உன் பதவியேற்பு. இங்கு நித்தமும் உடல் பறிப்பு பாத்திராதே ஏதேனும் செய். உயிர் இழப்புக்களில் இருந்து உன் உடன்பிறப்புக்களை காப்பாற்று.

## வருட இறுதியில் 17000 தொலைபேசி இணைப்புகளை வழங்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

இவ் வருடம் முடிவடைவதற்கிடையில் 17 ஆயிரம் ரெலிக்கொம் தொலைபேசி இணைப்புக்களை யாழ்ப்பாணம் , கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு வழங்கத் திட்டமிட்டிருப்பதாக ஸ்ரீலங்கா ரெலிக்கொம் நிறுவனத்தின் யாழ்.பிராந்திய முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த வருடத்தில் மாத்திரம் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு 2ஆயிரம் தொலைபேசி இணைப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன.

சில பிரதேசங்களில் நிலவிய சூழ்நிலைகள் காரணமாக மேலதிக தொலைபேசி இணைப்புக்களை வழங்க முடியாமல் போனது. எனினும் இவ் வருடத்திலும், முதற்கட்டமாக 2 ஆயிரம் கம்பி மூலமான தொலைபேசி இணைப்புக்களை வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எமக்கு 'ஸிட்டிலிஸ்' வசதிகள் செய்து தரப்படுமாயின் மேலதிகமாக 15ஆயிரம் தொலைபேசி இணைப்புகளை வழங்கவும் திட்டமிட்டுள்ளோம். இதனூடாக குறித்த 3 மாவட்டங்களுக்கும் இவ் வருடம் முடிவதற்கிடையில் 17 ஆயிரம் இணைப்புகளை வழங்கத் திட்டமிட்டுள்ளோம்.

இதேவேளை, தற்போது இம் மூன்று மாவட்டங்களிலும் 9ஆயிரத்து 500இற்கும் மேற்பட்டவர்கள் ரெலிக்கொம் தொலைபேசி இணைப்புகளை கொண்டிருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (சு-9)

## காணியற்ற வறிய குடும்பங்களுக்கு காணி பகிர்ந்தளிக்க நடவடிக்கை

(கொழும்பு)

காணியற்ற வறிய குடும்பங்களின் நலன்கருதி, அரச காணியைப் பகிர்ந்தளிக்கும் திட்டமொன்றை பிரதேச செயலக பிரிவுகள் மட்டத்தில் ஆரம்பித்து வைக்கவுள்ளதாக விவசாய சுற்றாடல் நீர்ப்பாசன மகாவலி அபிவிருத்தி அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

கிராமிய அபிவிருத்தி கருதி ஆரம்பிக்கப்படவுள்ள இத்திட்டத்தின் கீழ் வீடமைப்பு மற்றும் வருமான வாய்ப்புக்களை மேம்படுத்தும் புதிய குடியிருப்புத் திட்டத்திற்கமைய இக் காணிகள் வழங்கப்படும். சமுர்த்தி உதவி பெறும் வறிய குடும்பங்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் காணிகள் பகிர்ந்தளிக்கப்படும். இக்காணிகள் பகிர்ந்தளிக்கப்படும் குடும்பங்களுக்கிடை யில் சுகாதார அபிவிருத்தி த சமூக அபிவிருத்தி மற்றும் பொருளாதா அபிவிருத்தி என்பவற்றிலும் கூடிய கவனம் செலுத் தப்படும் எனவும் அமைச்சர் மைத்திரிபால சிறிசேன மேலும் தெரிவித்துள்ளார். (சு-9)

## கடற்பிராந்திய உரிமை அரசாங்கத்துக்கு மட்டுமேயுள்ளது -ஹெகலிய ரம்புக்வெல

(கொழும்பு)

கடற்பிராந்திய உரிமையானது அரசாங்கத்துக்கு மட்டுமே உண்டு என்று அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு அவர் அளித்த நேர்காணலில்,

அமைதி முயற்சிகளிலிருந்து வெளியேறுவதில்லை என்பதில் அரசாங்கம் உறுதியாகவுள்ளது. இருப்பினும் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட ஒரு அரசாங்கமானது நாட்டினது பாதுகாப்பை உறுதிசெய்ய வேண்டியது அதனது கடமை. அப்பொறுப்பிலிருந்து விலகிக்கொள்ள முடியாது.

கடற்பிராந்திய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அரசாங்கத்துக்கு மட்டுமே அதிகாரம் உள்ளதாக யுத்த நிறுத்த ஒப்பந்தம் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளது.

அரசாங்கம் முகம் கொடுத்திருக்கும் இப் பிரச்சினைகளை பாரதூரமாக சர்வதேச சமூகமும் இணைத் தலைமை நாடுகளும் அவதானிக்க வேண்டும்.

கடந்த நான்காண்டு கால புலிகளின் யுத்தநிறுத்த மீறல்களுக்கு அப்பால் அரசாங்கம் அமைதியை உருவாக்கவே தொடர்ந்து முயற்சிக்கிறது. அரசாங்கத்தால் எந்த அளவுக்குச் செய்ய முடியுமோ அந்தளவுக்குச் செய்துள்ளது.

தென் தமிழீழத்திலிருந்து வட தமிழீழத்துக்கு புலிகளின் தளபதிகள் பயணம் மேற்கொள்வதற்காக முன்வைக்கப்படுகிற ஒவ்வொரு கோரிக்கைக்கும் அரசாங்கம் இயன்ற வரை உரிய ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

சர்வதேச வரலாறுகளை நாம் பார்த்தால் இத்தகைய நிகழ்வுகள் முன்னரும் நடந்திருக்கின்றன. தென்னாபிரிக்காவில் பேச்சுக்களிலிருந்து 17 முறை அந் நாட்டுத் தரப்பினர் வெளியேறியிருக்கின்றனர். ஆனால் அமைதி முயற்சிகளில் அவர்கள் தொடர்ந்து ஈடுபட்டு வந்தனர் என்றார்.

இதேவேளை, யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் விடுதலைப் புலிகளின் பயன்பாட்டிற்கான கடற்பிரதேசம் என்று எதுவுமே குறிப்பிடப்படவில்லை. அது குறித்து பரிசீலிக்கவும் இல்லை என்று கடற்படையின் பேச்சாளர் டி.கே.பி.திஸநாயக்க தெரிவித்துள்ளார். (க)

## கண்காணிப்பாளர் அச்சுறுத்தப்பட்டார்

(கொழும்பு)

இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் உறுப்பினரும் அவரது வாகனச் சாரதியும் நேற்று முன்தினம் திருகோணமலை அபயபுர பகுதியில் இனந்தெரியாத சிலரால் அச்சுறுத்தப்பட்டிருக்கின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

திருகோணமலையிலுள்ள கண்காணிப்புக் குழுவின் உறுப்பினர் ஒருவர் சென்ற வானத்தை நேற்று முன்தினம் காலை வழிமறித்த அவர்கள் அவரையும் அவரது சாரதியையும் தாக்கவும் முற்பட்டுள்ளனர்.

எவ்வாறாயினும் அவர்களின் பிடியிருந்து ஒருவாறு தப்பித்துவந்த கண்காணிப்பாளர் இது குறித்து தமது தலைமை அலுவலகத்திற்கு அறிவித்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (க)

## மீண்டும் போர் ஏற்பட்டால் சர்வதேச நிதி உதவி கிடைக்காது

### ஜே.வி.பிக்கு அகாஷி எடுத்துரைப்பு

(கொழும்பு)

இலங்கையில் மீண்டும் போர் ஏற்பட்டால் சர்வதேச நிதி உதவிகள் நிறுத்தப்பட்டுவிடும் என்று ஜே.வி.பியினரிடம் ஜப்பான் சிறப்பு தூதுவர் யகூசி அகாஷி தெரிவித்துள்ளார்.

ஜே.வி.பியின் தலைமையகத்தில் கடந்த வாரம் அக்கட்சித் தலைவர் சோமவன்ஸ அமரசிங்கவை சந்தித்த அகாஷி இது தொடர்பில் கூறுகையில்,

இறுதித் தீர்வு காணாமல் மீண்டும் போருக்க தள்ளுவதனால் இலங்கையின் அபிவிருத்திக்கான சர்வதேச நிதி உதவிகள் கிடைக்காது.

அத்தகைய நிலைமையை உருவாக்காமல் பேச்சுக்கள் மூலம் தீர்வு காண அரசு முன்வரவேண்டும் அதற்கு ஜே.வி.யின் பூரண ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்றார். ஆனால் ஜே.வி.பியின் சோமவன்ஸ அமரசிங்கவோ, இலங்கையில் ஏற்கனவே போர் தொடங்கிவிட்டது என்று கூறினார். (க)

## நோர்வே சிறப்புத் தூதுவருடன் பாலித கோகன்ன ஆலோசனை

(கொழும்பு)

இலங்கைக்கான நோர்வே சிறப்புப் தூதுவர் ஹன்சன் பௌயரை ஸ்பெயின் நாட்டில் இலங்கையின் சமாதான செயலகப் பணிப்பாளர் பாலிதகோகன்ன சந்தித்துப் பேசினார்.

பார்சிலோனாவுக்கு கடந்த செவ்வாய்க்கிழமை பாலித கோகன்ன பயணம் மேற்கொண்டார்.

நோர்வே சிறப்புத்தூதுவர் ஜோன் ஹன்சன் பௌயர் மற்றும் அமைதி முயற்களில் தொடர்புடைய அதிகாரிகளைச் சந்திப்பதற்காக அவர் அங்கு சென்றிருந்தார்.

ஹன்சன் பௌயருடனான சந்திப்பில் இலங்கை அமைதி முயற்சிகளின் எதிர்காலம் மற்றும் தற்போதைய சிக்கல்களுக்கான தீர்வு குறித்து விவாதிக்கப்பட்டுள்ளது.

மேலும் இம்மாத இறுதியில் டோக்கியோவில் நடைபெறவுள்ள இணைத்தலைமை நாடுகளின் கூட்டம் தொடர்பாகவும் இருவரும் விவாதித்துள்ளனர்.

இந்தச் சந்திப்பு முடிவடைந்த நிலையிலேயே தமிழீழக் கடற்பரப்பில் இலங்கை கடற்படையினர் அத்துமீறி உள் நுழைத்து தாக்கிய சம்பவம் நடந்தது. (க)

## தினசரி தியானம் விவேகச் சிந்தனைகள்



வியாபாரிகள் இருப்புத் திட்டம் பார்ப்பது போல் நம்மிடத்தில் என்ன என்ன நல்ல குணங்கள் இருக்கின்றன என்றும் எவ்வளவு தூரம் ஆன்மீகத்தில் முன்னேறியிருககிறோம் என்றும் சோதித்துப்பார்.

சுவாமி விவேகானந்தர்

# கோப்பாய் பகுதியில் இளைஞர் சுட்டுக்கொலை

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் பகுதியில் நேற்று பிற்பகல் 2 மணியளவில் இடம் பெற்ற துப்பாக்கிச்சூட் டில் இளைஞர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

முன்னதாக நேற்று பிற்பகல் 1.30 மணி யளவில் இராணுவத்தினர் மீது கிரனைட் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதில் இராணுவச் சிப்பாய் ஒருவர் படு காயமடைந்தார். படுகாயமடைந்தவர் பலாலி இராணுவ வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

அதனையடுத்து 2 மணியளவில் பிரஸ் தாப இளைஞன் சென்று கொண்டிருந்த போது கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரிக்கு முன்பாக வைத்து இராணுவத்தினரால் சுட் டுக் கொல்லப்பட்டுள்ளார்.

அதே இடத்தைச் சேர்ந்த கோபியன் (வயது 21) என்பவரே கொல்லப்பட்டவராவார். இத் துப் பாக்கிச்சூட்டின் போது சிறுமி ஒருவர் காயம டைந்ததாக தெரிவிக்கப்பட்டது. கௌசிகா (வயது 04) என்ற சிறுமியே காயமடைந்த வராவார். (ச-15,05)

# ஏறாவூரில் எறிகணை வீச்சு

மட்டக்களப்பு ஏறாவூரில் இராணுவத்தினர் நடத்திய எறிகணைத் தாக்குதலில் 7அப்பா விப் பொதுமக்கள் படுகாயமடைந்துள்ளனர்.

ஏறாவூர் 5-ம் வட்டாரப்பகுதியில் நேற்று முன்தினம் இரவு 11.45 மணியளவில் இத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

படுகாயமடைந்தோரில் இருவர் மிகவும் ஆபத்தான நிலையில் உள்ளதாக தகவல் கள் கிடைத்துள்ளன. முன்னதாக அடையா ளம் தெரியாத நபர்களால் நேற்று முன்தினம் இரவு 11.15 மணியளவில் ஏறாவூர் பொலிஸ் நிலையத்திற்கு பின்புறம் உள்ள காவல் நிலை மீது மோட்டார் எறிகணைத் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் அதைத் தொடர்ந்து அப்பாவிப் பொதுமக்கள் மீது எறிகணைத் தாக்குதலை பொலிஸாரும் இராணுவத்தி னரும் இணைந்து மேற்கொண்டதாகவும் தெரியவருகிறது. (ச-05)

# பெற்றோல்மக்ஸுடன் வந்த நால்வரே சுட்டுத்தள்ளினர்

## அல்லைப்பிட்டி மக்கள் தகவல்

(யாழ்ப்பாணம்)

தலையில் சிவப்பு, நீல றிபன் கட்டி ரீசேட் டும் காற்சட்டையும் அணிந்து வந்த நான்கு ஆயுத தாரிகளே ஒரே வீட்டில் எட்டுப்பேரை சுட்டுக்கொன்றதுடன் அருகில் இருந்த கடை மீது கிரனைட் வீசி மற்றொருவரையும் படு கொலை செய்துள்ளனர்.

பெற்றோல்மக்ஸ் விளக்குடன் வந்த நான்கு ஆயுதாரிகளும் வீட்டுக்குள் புகுந்து கீழத்தளத்தில் உறங்கிக்கொண்டிருந்த 4 மாதக்குழந்தை உட்பட நான்கு பேரை சுட் டுக்கொன்றுள்ளனர்.

மேற்தளத்திற்குச் சென்ற இவர்கள் அங் கிருந்த இருவரையும் கொன்றுள்ளனர். துப்பாக்கிச்சத்தம் கேட்டு வீட்டுக்கு வந்த மற்று மிருவரையும் இவர்கள் சுட்டுக்கொன்றனர்.

அதன் பின்னர் அருகில் உள்ள கடை ஒன்றின் மீது இவர்கள் கிரனைட் தாக்கு தலை மேற்கொண்டனர் என அல்லைப்பட்டி மக்கள் தெரிவித்தனர்.

இதேவேளை சம்பவ இடத்திற்கு நேற்று அதிகாலை 1 மணியளவில் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பிரதிநிதிகள் சென்று பார்வையிட்டுள்ளனர்.

அச்சமடைந்த மக்கள் கண்காணிப்புக் குழுவினரை தங்களுடன் தங்குமாறு கோரி அவர்களது கால்களில் விழுந்து அழுது மன் றாடினர்.

இரவில் அப் பகுதியில் தங்குவது பாது காப்பானது அல்ல எனக்கூறிய அவர்கள் அங்கிருந்து புறப்பட்டனர். (ச-05, 15)

# நேற்று ஹர்த்தால்

(யாழ்ப்பாணம்)

யாழில் நேற்று பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. இதனால் போக்குவரத் துக்கள் அனைத்தும் நிறுத்தப்பட்டன. உண வகங்கள் உட்பட அனைத்துக் கடைகளும் பூட்டப்பட்டிருந்தன.

ஹர்த்தால் காரணமாக மக்கள் வீட்டை விட்டு வெளியில்வர வில்லை. இதேவேளை நேற்று யாழ்.நகர் பகுதியில் திடீர் திடீர் என தோன்றும் இராணுவத்தினர் வீதிச்சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

பரமேஸ்வராச் சந்தியில் உள்ள சர்வதேச தமிழ்மொழி மாணவர் பேரவை அலுவலகமும் பாராளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரனின் அலுவலகமும் தீயிட்டுக் கொளுத்தப்பட்ட மைக்கு கண்டனம் தெரிவித்து நேற்று ஹர்த் தால் அனுஷ்டிக்கப்பட்டமை குறிப்பிடத்தக் கது. (ச-05)

# யாழில் இடம்பெறும் கொலைகளுக்கு...

நிலையில் திட்டமிட்ட வகை யில் இப் படு கொலைகளைச் செய்துள்ளனர்.

அவர்களுடன் 6.30 மணியளவில் யாழ்ப் பாணத்தில் 2 பிக்கப் வாகனங்களில் சென்ற ஈ.பி.டி.பி.குழுவினரும் இணைந்தே இக் கொலையை செய்துள்ளனர்.

இதில் இரு குழந்தைகள் உட்பட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த அறுவருடன் எட்டு பேர் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டுள் ளனர். அத்துடன் படுகாயமடைந்த மூவர் பலத்த சிரமங்களின் மத்தியில் யாழ்.போத னா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு அங்கு ஒருவர் உயிரிழந்துள்ளார்.

சம காலத்தில் வங்களாவடி ,வேலணை மேற்கு,புளியங்கூடல் ,நாரந்தனை போன்ற இடங்களிலும் கடற்படையினரும்,ஈ.பி.டி.பி. குழுவினரும் மிலேச்சத்தனமாக அப்பாவி மக்களை குடும்பம் குடும்பமாக படுகொலை செய்தும் அவர்களின் சொத்துக்களை எரி யூட்டி நாசமாக்கியும் உள்ளனர்.

கடற்படையினரதும் துணை இராணுவக் குழுவினரதும் இந்த மிலேச்சத்தனமாக நட வடிக்கைகள் அப்பட்டமான யுத்தநிறுத்த மீறல் என்பதற்கு மேலாக சர்வதேச மனித உரிமை நியமங்களை மீறும் காட்டுமிராண் டித்தனமான செயற்பாடுகளாகும்.

அத்துடன் பச்சிளம் குழந்தைகளை குடும் பத்துடன் சேர்த்து பரிதவிக்கக்கொன்றமை யானது ஐ.நா.வின் குழந்தைகள் மற்றும் சிறுவர்கள் உரிமை சாசனங்களை குழி தோண்டிப் புதைக்கும் ஒரு செயலாகும்.

மேலும் நேற்றும் ஆவரங்காலைச் சேர்ந்த இராசையா புலேந்திரன் (வயது 30) அச்சுவேலி கதிரிப்பாயைச் சேர்ந்த பசுவலிங் கம் காண்டீபன் (வயது 25) என்ற அப்பாவி இளைஞனும் இராணுவத்தினரின் துப்பாக் கிக்கு இரையாகியுள்ளனர்.

குடாநாட்டில் பாதுகாப்புப்படையினரால் பால், வயது வேறுபாடின்றி குடும்பமாகவும் தனித்தும் மேற்கொள்ளப்பட்டுவரும் படு கொலைகளின் எண்ணிக்கை கட்டுக்கடங் காமல் செல்கிறது.

இப் படுகொலைகள் தொடர்பாக கொலை யானவர்களின் உறவினர்கள், காயமடைந் தோர் ஆகியோருடன் நாங்களும் போதிய ஆதாரங்களையும் சாட்சிகளையும் சமர்ப் பித்திருந்தும் படுகொலைகளுக்கு படையின ரும் துணை இராணுவக்குழுக்களுமே பொறுப்பானவர்கள் என்ற உண்மையை தாங்கள் இன்று வரை உரிய முறையில் பகிரங் கமாக வெளிப்படுத்தாத காரணத்தால் தொடர்ந்தும் படையினர் இவ்வாறான படு கொலைகளைப் புரிவதற்கு வாய்ப்பு ஏற்படு கின்றது.

எனவே இதனைப் பகிரங்கமாக வெளிப் படுத்துவதன் மூலம் இப்படுகொலைகளுக்கு முற்றுப் புள்ளி வைக்கவேண்டுமென்று கேட் டுக்கொள்கிறோம் என உள்ளது. (ச-05)

# படுகொலைகளைத் தடுப்பதற்கு...

எதிராக எந்த நடவடிக்கை யும் எடுக்கவில் லை. இதனால் தங்கள் அர சின் மீது கூட்ட மைப்பினராகிய நாம் சலிப் பும் வெறுப்பும் அடைந்துள்ளோம்.எனினும் ஜனநாயக கடமையை நிறைவேற்றுவதற்காக தீவுப்ப குதியில் இடம் பெற்ற கொடூரமான சம்பவங் கள் குறித்து தெரியப்படுத்துகின்றேன்.

தீவுப்பகுதியில் நேற்று முன்தினம் ,எதுவும் அறியாத சிறுவர்கள் ,முதியவர்கள், பெண் கள் என 13 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

இதைவிட ஆவரங்கால் , அச்சுவேலிப் பகுதிகளிலும் இருவர் சுட்டுக்கொல்லப்பட் டுள்ளனர். இது ஒரு தொடர்கதை. இனப்படு கொலை நடவடிக்கை. இத்தகைய அரச பயங்கர நடவடிக்கையினாலேயே 20 ஆண் களுக்கு முன்னர் தமிழ் இளைஞர்கள் ஆயு தம் ஏந்திப் போராடத்தொடங்கினர்.

தற்போது மக்கள் படுகொலை செய்ய படுவதால் மேலும் ஆயுத வன்முறையே அதிகரிக்கும்.அது ஒரு முழுயுத்தத்திற்கே இட்டுச்செல்லுமென அச்சமடைகிறோம்.

அரசு பார்த்துக்கொண்டு ஆயுதப்படைக ளுக்கு பாராட்டு சொல்கிறதே தவிர அப்பாவி மக்கள் மீது அனுதாபமின்றி எந்த நடவடிக் கையும் எடுக்கவில்லை என நாம் குற்றஞ் சாட்டுகின்றோம்.இதற்கு எமது கண்டனத்தை தெரிவிக்கிறோம் என அக்கடிதத்தில் தெரி விக்கப்பட்டுள்ளது. (ச-05)

# துப்பாக்கி முனையில் லொறி கடத்தப்பட்டது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் துப்பாக்கி முனையில் அடையாளம் தெரியாத நபர்களால் லொறி ஒன்று கடத்தப்பட்டுள்ளது.

வாகரையில் இருந்து ஓட்டமாவடி நோக் கிச் சென்று கொண்டிருந்த போது ஓட்டமாவடி பாலம் அருகில் இந்த லொறி துப்பாக்கி முனையில் நேற்று மாலை இனந்தெரியாத நபர்களால் கடத்தப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.

மே முதல் வாரத்திலும் அடையாளம் தெரியாத நபர்களால் வாகரை பல நோக்கு கூட்டுறவுச்சங்க லொறி ஒன்று கடத்தப்பட் டமை குறிப்பிடத்தக்கது. (ச-05)

# இரு குழந்தைகள் உட்பட...

**அல்லைப்பிட்டி**

அல்லைப்பிட்டி வடக்கு 2-ம் வட்டாரத்தில் உள்ள வீடொன்றினுள் நேற்று முன்தினம் இரவு 9மணிக்கு முகத்தினை கறுப்புத்துணி யினால் கட்டிக்கொண்டு உள்நுழைந்த கடற் படையினர் அங்கிருந்தவர்களை படுக்கை யில் வைத்து சுட்டுக்கொலை செய்துள்ளனர்.

இதில் ஒரு நான்கு மாதக்குழந்தை மற் றும் 4வயதுச் சிறுவன் உட்பட 8 பேர் படுக் கையிலேயே மரணமாகினர்.

மற்றொருவர் படுகாயமடைந்த நிலை யில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கு சிகிச்சை பயனளிக் காமல் நேற்று உயிரிழந்தார்.

சம்பவம் தொடர்பாக தெரிந்துகொண்ட அப் பகுதி மக்கள் பயத்தினால் உறைந்து போயுள்ளனர். சிலர் தமது வீடுகளை விட்டு இடம்பெயர்ந்து தேவாலயங்களில் தஞ்சம டைந்துள்ளனர்.

அல்லைப்பிட்டி சோகமயமாகக் காட்சிய ளிக்கிறது. பச்சிளம்பாலகர்கள் உட்பட அவ ரது பெற்றோர் படுக்கையில் உயிரிழந்து கிடக்கும் கோரக்காட்சி மக்களை கொதிப் படைய வைத்துள்ளது.

இச் சம்பவத்தில் பாலச்சாமி கேதீஸ்வரன் (வயது 25), அவரது மனைவி அனஸ் எஸ்த்தர் (வயது 25) அவரது குழந்தைகளான யதுஷா (4 மாதம்); தனுஷ்காந்த (04 வயது) மற்றும் மூன்று பிள்ளைகளின் தந்தையான ஏபிரகாம் றொபின்சன் (வயது 28) ஒரு பிள்ளையின் தந்தையான செல்லத்துரை அமுதாஸ் (வயது 28) நான்கு பிள்ளைகளின் தந்தையான கணேஸ் நவரத்தினம் (வயது 50) ஐந்து பிள்ளைகளின் தந்தையான யோசப் அந்தோனிமுத்து (வயது 64) மற்றும் சிவ நேசன் (வயது 56) ஆகிய 9 பேருமே ஒரு வீட்டில் வைத்து படுக்கையில் சுட்டுக்கொல் லப்பட்டவர்களாவர்.

சம்பவ இடத்திற்கு நேற்றுக் காலை ஊர்கா வற்றுறை பொலிஸார் சகிதம் சென்ற ஊர் காவற்றுறை நீதிமன்ற நீதிவான் றொக்சி சட லங்களை பிரேத பரிசோதனையின் பொருட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்ப டைக்குமாறு உத்தரவிட்டார்.

மரண விசாரணையின் பின்னர் சடலங் கள் நேற்று மாலை உறவினர்களிடம் ஒப்ப டைக்கப்பட்டது.

**புளியங்கூடல்**

இதேவேளை நேற்று முன்தினமிரவு புளி யங்கூடலில் உள்ள வீடு ஒன்றினுள் புகுந்த இனந்தெரியாதோர் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவரை சுட்டுக்கொன்று விட்டு தப் பிச்சென்றுள்ளனர்.

முருகேசு சண்முகலிங்கம் (வயது 72); அவரது மனைவி பரமேஸ்வரி (வயது 65); அவரது மகன் காந்தரூபன் (வயது 24) ஆகிய மூவருமே சுட்டுக்கொல்லப்பட்டவர்களாவர்.

இவர்களில் காந்தரூபன் என்பவர் தொலைத்தொடர்பு நிலையம் நடத்தி வருவ தாக தெரிவிக்கப்பட்டது.

**வேலணை**

வேலணை வங்களாவடியில் வைத்து நேற்று முன்தினம் இரவு இளைஞன் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார். சுட்டுக்கொல்லப்பட் டவர் வேலணை ஐந்தாம் வட்டாரத்தைச் சேர்ந்த இரட்ணம் செந்தூரன் (வயது 22) என்பவர் சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

இவர் கடையொன்றில் படுத்திருந்த சம யமே கொல்லப்பட்டுள்ளதாக தெரி விக்கப் பட்டது.

**கடைகள் தீக்கிரை**

நேற்று முன்தினமிரவு வேலணை வங்க ளாவடி மற்றும் புளியங்கூடல் பகுதியில் உள்ள 20 மேற்பட்ட கடைகள் இனந்தெரி யாதோரால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

வங்களாவடியில் உள்ள பெற்றோல் நிரப்பு நிலையம் ஒன்றும் தீக்கிரையாக்கப் பட்டது. வேலணையில் 5 கடைகளும் ;புளி யங்கூ டலில் 15 கடைகளும் தீக்கிரை யாக் கப்பட் டுள்ளன. அங்கிருந்தபல இலட்சம்பெறுமதியான பொருட்கள் எரிந்து நாசமாகியுள்ளன.(ச,15,5)





நாதன்ஸ் சினிமா யாழ்ப்பாணம்

04.05.2006 முதல்

10.30,2.30,6.30,9.30

மாமனிதக் குரங்கொன்றின் நெஞ்சை உருக்கும் கதை கொண்ட சாகசச் சித்திரம்

பீட்டர் ஜக்ஷன்

கிங்கொங்

(KING KONG)

தங்கத்தமிழ் மொழியில். பாடசாலை மாணவர்களுக்கு விசேட சலுகை


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில 15.05.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.